# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 35 கதிர் 09 கார்த்திகை 19ஆம் நாள் வியாழக்கிழமை 05 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள

NEWUTHAYAN.COM


## கோத்தாவை கொல்லச் சதி!

*4 தமிழர்கள், ஒரு முஸ்லிம் கைது*

*சிங்கள ஊடகம் பரபரப்புத் தகவல்*

**கொழும்பு, டிசெம்பர். 5**

**கட்டுநாயக்க பிரதேசத்தில் வைத்து அரச தலைவர் கோத்தபாயவைக் கொல்வதற்குச் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று பரபரப்புச் செய்தி வெளியிட்டது.**

23

## இரு ஆளுநர்கள் நேற்று நியமனம்

கொழும்பு, டிசெ. 5

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண புதிய ஆளுநர்கள் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றனர்.

கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநராக அநுராதா யகம்பத் நியமிக்கப்பட்டுள்ளதுடன், வட மத்திய மாகாணத்திற்கான ஆளுநராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

(ம-22)

## கிணற்றில் வீழ்ந்து பாலகன் இறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 5

ஐந்து வயதேயான பாலகன் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தான். குகதீசன் நிரூஜன் என்ற சிறுவனே அவ்வாறு உயிரிழந்தவனாவான். அராலி கிழக்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவ

23

## கோத்தாவின் ஆட்சியில் ஊடக அச்சுறுத்தல்கள்

*எல்லைகளற்ற நிரூபர்கள் அமைப்பு கவலை*

கொழும்பு, டிசெ. 5

கோத்தபாய ராஜபக்ச பதவியேற்று இரண்டு வாரங்களே ஆகின்ற நிலையில், தேடுதல்கள், அச்சுறுத்தல்கள், விசாரணைகளை தாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்ற இலங்கை ஊடகவியலாளர்களின் கவலைகளை நாம் பகிர்கின்றோம் என்று தெரிவித்துள்ளது எல்லைகளற்ற நிரூபர்கள் அமைப்பு.

இது தொடர்பில்

03

## இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்தார் சஜித் எம்.பி

*இம்முறை விகாரைகளில் இருந்து*

கொழும்பு, டிசெ. 5

அரச தலைவர் தேர்தலில் கிடைத்த தோல்வியை அடுத்து சிறிதுகாலம் அமைதியாகவிருந்த சஜித்

23



## ஏப்ரல் இறுதியில் பொதுத் தேர்தல்!

கொழும்பு, டிசெ. 5

மார்ச் மாதத் தொடக்கத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்.

அதன்படி மார்ச்

23

## சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டமைக்கு ஆதாரங்கள் இல்லை

*கைவிரிக்கின்றது அரசு*

கொழும்பு, டிசெ. 5

'சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் எந்த ஆதாரங்களும் இப்போது வரையில் கிடைக்கவில்லை. அத்துடன் உரிய பெண் அதிகாரியும் இன்றுவரை வாக்குமூலம் எதையும் வழங்காது மௌனம் காக்கின்றார்' இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் இலங்கை அரசையும் புதிய அரச தலைவரையும் நெருக்கடிக்குள் தள்ளும் பன்னாட்டு இராஜதந்திர ரீதியிலான சதித்திட்டம் என்றே கருத வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்

23

## யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு நாளை ஆரம்பம்

*1,811 பேர் பட்டங்களைப் பெறுவர்*

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 34ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6, 7, 8ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இம்முறை ஆயிரத்து 811 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது. சந்திப்பில் பல்கலைக் கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி தெரிவித்ததாவது.

எதிர்வரும் 6, 7, 8ஆம்

23

## இம்முறை ஓ.எல். பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் வட மாகாணத்தில் அதிகம்!

யாழ்ப்பாணம், டிசெ. 5

இந்த வருடம் க.பொ.த சாதாரணை தரப் பரீட்சைக்கு, வடக்கு மாகாணத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகளை விட தனிபட்ட பரீட்சார்த்திகள் அதிக எண்ணிகையில் தோற்றியுள்ளனர் என்று மாகாண கல்வித் திணைகளப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2019ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகி தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் வடக்கு மாகாணத்தில் இருந்து 51

23

## டெங்கு பேராபத்து எதிரொலி
## யாழ். நகர கல்வி நிறுவனங்களை இரு வாரங்கள் மூடும்படி உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் இரண்டு வாரங்கள் மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இந்தப் பருவகால மழையை அடுத்து டெங்குத் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் மட்டும் ஆயிரத்து 549 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் வசதிக் குறைபாட்டுடன் இயங்குகின்ற காரணத்தாலும், கல்வி நிறுவனங்களில் கற்க வரும் மாணவர்கள் மூலம் டெங்கு

23

## அடிகாயங்களுடன் இளைஞன் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 5

தலை உட்பட உடலின் பல பகுதிகளில் பலத்த அடிகாயங்களுடன் இளைஞரொருவர் கல்வியங்காடு பகுதியில் நேற்று மீட்கப்பட்டார்.

அவர் யாழ்ப்பா

23

## அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து ஏழு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

கொழும்பு, டிசெ. 5

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து தண்டனை அளிக்கப்பட 7 தமிழ் அரசியல் கைதிகளை அரசு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவர்களின் தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே ஆரவாரம் எதுவும் இன்றி விடுதலை செய்துள்ளது.

இந்த 7 சிறைக் கைதிகளும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவரான யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த நபர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்ததாவது:

'நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகள் எம்மைத் திடீரென அழைத்து விடுதலை செய்

23

## துயர் பகிர்கின்றோம்

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான
திருமதி சிவரஞ்சனி ரமணா அவர்களின் தாயார்

**ஸ்ரீமதி ஸ்ரீரஞ்சனி அம்மாள் சிவபாதசுந்தரம் ஐயர்**

அவர்கள் 28.11.2019 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யாழ்.கல்வி வலய இசையாசிரியர் கழகம்.**

(cs.29719) (13.17)



## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கண்மணியம்மா (கிளியக்கா)




நீர்வேலிதெற்கு கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கண்மணியம்மா (கிளியக்கா) நேற்று (04.12.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய இ.போ.ச. சிரேஸ்ட சாலை பரிசோதகர், பருத்தித்துறை, மன்னார், யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு ஸ்ரீசுப்பிரமணிய சனசமூகத்தலைவர்) அவர்களின் பாசமிகு மனைவியும் புண்ணியமூர்த்தி (நோர்வே), கிருஸ்ணமூர்த்தி (லண்டன்), சிவமூர்த்தி (நகுலன்), காலஞ்சென்ற அபிராமி (இ.போ.ச கண்காய்வாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபத்திரா (நோர்வே), இராஜேஸ்வரி (லண்டன்), செல்வகுமாரி (ஆசிரியர், கிளி / பரந்தன் அ.த.க பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் ஹரிராம், கீரன் (நோர்வே), சஜீதன், லக்சதன், கௌசிதன் (லண்டன்), பவித்திரா, ஹன்சிகா (நீர்வேலி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**கணபதிப்பிள்ளை (076 697 3035)**
**சிவமூர்த்தி (076 362 0082)**

**தகவல் - குடும்பத்தினர்**


# முட்டாள் சிங்கமும் புத்திசாலி முயலும்



அடர்ந்த காட்டில் ஒரு கர்வம் கொண்ட சிங்கம் வாழ்ந்து வந்தது. நான்தான் இந்தக் காட்டுக்கு ராஜா என்ற கர்வத்துடன் அந்த சிங்கம் காட்டில் வாழ்ந்த அனைத்து மிருகங்களையும் வேட்டையாடியது.

ஏனைய சிங்கங்கள் உணவுக்காகவேட்டையாடும்போது இந்தச் சிங்கம் பொழுதுபோக்கிற்காக வேட்டையாடியது. இதனால் காட்டில் வாழ்ந்த மற்ற மிருகங்கள் சிங்கத்தின் மீது கோபம் கொண்டன.

ஒவ்வொரு நாளும் சிங்கம் பல மிருகங்களை வேட்டையாடியது. இதனைக் கண்ட மற்றைய மிருகங்கள் மிக்க பயத்துடன் வாழ்ந்து வந்தன.

சிங்கம் இப்படி பல மிருகங்களை ஒவ்வொரு நாளும் கொல்வதால் தாம் வெகு சீக்கிரமே இறந்துவிடுவோம் என எண்ணி அவை எல்லாம் ஒன்றுகூடி ஆலோசனை செய்தன.

சிங்கத்தை எதிர்த்து அவற்றால் போராட முடியாது என்பது அவற்றுக்கு நன்கு தெரியும். அதனால் அவை சிங்கத்துக்கு இரையாக தினம் ஒரு மிருகமாகப் போவதற்குத் தீர்மானித்தன. இதைக்கண்ட சிங்கம் மிகுந்த கோபத்துடன் உறுமியது. குரங்குக்குப் பயம் வந்து விட்டது. சிங்கம் குரங்கை பார்த்து, "உனக்கு என்ன துணிச்சல் இருந்தால் என் குகைக்கு வந்திருப்பாய்?" என்றது. அதற்கு குரங்கு, எல்லா மிருகங்களும் தினம் ஒருவராக உங்கள் குகைக்கு இரையாக வருகின்றோம் எனத் தெரிவித்தன. அதனால் சிங்கராசா இரை தேடி அலையத் தேவையில்லை.

"ஏன் இந்த முடிவு?" என்றது சிங்கம்.

தினம் தினம் எந்த மிருகம் உங்களால் வேட்டையாடப்படும் என்ற பயத்துடன் வாழ்வதை விட, தினம் ஒருவராக உங்கள் குகைக்கு இரையாக வந்தால் மற்ற மிருகங்கள் பயமின்றி சிறிது காலம் வாழலாம்" என்றது.

"அத்துடன் நீங்கள் பல மிருகங்களை ஒரு நாளில் கொன்றால் நாங்கள் எல்லோரும் சீக்கிரமே இறந்து விடுவோம். பின்பு உங்களுக்கு உணவுகிடைக்காமல் நீங்களும் சீக்கிரமே இறந்து விடுவீர்கள்" என்றது.

இதனைக் கேட்ட சிங்கராசாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. மேலும் குரங்கிடம் "தவறாமல் தினமும் காலையில் ஒரு மிருகம் கண்டிப்பாக வரவேண்டும். இல்லையென்றல் அனைவரையும் வேடையாடி விடுவேன்" என்றது சிங்கம்.

அன்றிலிருந்து தினம் ஒவ்வொரு மிருகம் சிங்கத்துக்கு இரையாகச் சென்றது.

ஒருநாள் ஒரு முயலின் முறை வந்தது. முயல் சிங்கத்தின் குகைக்கு சிறிது தாமதமாகச் சென்றது.

அதனால் சிங்கம் மிகுந்த கோபத்துடன் இருந்தது.

சிங்கம் முயலைப் பார்த்து நீ ஏன் தாமதமாகினாய் எனக் கர்ச்சித்தது.

அதனைக் கேட்ட முயலார் நடுக்கத்துடன் "சிங்கராசா" நான் வரும் வழியில் வேறொரு பெரிய சிங்கம் என்னை வேட்டையாட முயற்சி செய்தது. நான் பதுங்கி இருந்துவிட்டு இப்போதுதான் வருகிறேன் என்றது.

என்னைவிடப் பெரிய சிங்கம் இந்தக் காட்டில் இருக்கிறதா? என்று இறுமாப்புடன் கேட்டது சிங்கம்.

அதற்கு "சிங்கராசா" வாருங்கள் காட்டுகின்றேன் என்று சிங்கத்தை அழைத்துச் சென்று ஒரு கிணற்றைக் காட்டி இதற்குள்தான் அந்தப் பெரிய சிங்கம் இருந்தது என்று கூறியது.

அதனை நம்பிய சிங்கம் கிணற்றை எட்டிப் பார்த்தது. அப்போது சிங்கத்தின் நிழல் (பிம்பம்) வேறொரு சிங்கம் கிணற்றினுள் இருப்பது போல் தெரிந்தது. சிங்கம் அதைப் பார்த்து கர்ச்சித்தது.

பிம்பமும் கர்ச்சித்தது. சிங்கத்துக்கு ஆத்திரம் பொங்கியது. இதோ பார் உனக்கு ஒரு முடிவு கட்டுகிறேன் எனக் கூறிக்கொண்டு கிணற்றினுள் பாய்ந்தது. சிங்கம் கிணற்று நீரில் மூழ்கி மாண்டது.

முயல் துள்ளிக் குதித்து வெற்றியை மற்ற மிருகங்களிடம் சென்று கூறியது. காட்டில் கொண்டாட்டம் தொடங்கியது. முயலின் சமயோசித முயற்சியால் மற்றைய மிருகங்களும் காப்பாற்றப்பட்டன.

**முயற்சியும் திறமையும் இருந்தால் எதையும் வென்றிடலாம்.**


## மரண அறிவித்தல்



### திருமதி சிலுவைராசா செபமாலையம்மா (நேசமணி)

நவாலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி சிலுவைராசா செபமாலையம்மா (நேசமணி)** நேற்று **(04.12.2019)** புதன்கிழமை இறைவன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பிரகாசம் சிலுவைராசா அவர்களின் பாசமிகு மனைவியும் அடைக்கலம், பெனோ (பெனடிக்ட்), அருட்சகோதரி றொசிற்றா (திருக்குடும்ப கன்னியர் சபை), நாதன் (லண்டன்), திரேசம்மா (முன்னாள் ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), ஜெயந்தி (கனடா), மேரி ஜோசப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றமேஸ் (லண்டன்), விஜயா (ஜேர்மனி), அருட்பணி அருட்செல்வன் (பங்குத்தந்தை, முழங்காவில்), மேரிஸ்றெலா, மேரி கலிஸ்ரா (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர்), சுதாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், முல்லைத்தீவு), அமலதாஸ் (றோய் - சேட்டீஸ் லங்கா, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாணி, விஜி, மோகன், ரஞ்சன், கீர்த்திகா, ஸ்றெலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை **நாளை (06.12.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00** மணியளவில் நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் நவாலி புனித பேதுரு பாவிலு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS29405(16/17)

**077 130 4516** **தகவல்: குடும்பத்தினர்**


**இங்குள்ள சொ்ரிப் பழங்களை சிறியதில் இருந்து பெரியது வரை வரிசைப்படுத்தி எழுதுங்கள்**



HONDA மீண்டும் மானிப்பாயில் ரஞ்சிற் மோட்டேர்ஸ்

யாழ் மக்களுக்காக
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
HONDA இணைந்து
வழங்கும் பண்டிகைக்கால
மாபெரும் சலுகைகள்

01.12.2019 – 15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

(ரஞ்சிற் றிப்பியறிங் & சேவிஸ் சென்டர்)

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள்
ரஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்

எமது சேவைகள்
- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



பண்டிகைக் கால சலுகைகள்

விலைக்கழிவு
தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15000/- வரை

காசு மூலமான சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

லீசிங் மூலம் விசேட சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

சிறப்பு சலுகைகள்
எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி
(நிபந்தனைக்குட்பட்டது)

Ranjit Motors
(RRSC Motors Engineers)

Sales & Parts
No- 311/A, Jaffna Road, Manipay.
இல- 311/A, யாழ் வீதி, மானிப்பாய்.
021 492 7627, 021 225 5228

Service & Parts
No- 14 Suthumalai Road, Manipay
இல- 14 சுதுமலை வீதி, மானிப்பாய்.
021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898
E.Mail: rrscmanipay@gmail.com
F.Book: Honda Ranjit Motors

AJA2272(16/17)


## யாழ் ஆரோக்கிய நகர் திட்டம் - 2019

### பேச்சு, வரைதல், கட்டுரை போட்டிகள்

**பேச்சுப் போட்டி**

திகதி: 13.12.2019
நேரம்: காலை 9.00 மணி

*தொனிப்பொருள்* (07 நிமிடம்)

1. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் மாணவர்களின் பங்கு.
2. யாழ்ப்பாணத்தை ஓர் ஆரோக்கியமான நகராக உருவாக்கு வதற்கு சமூகம் எவ்வாறு உதவலாம் ?
3. யாழ்ப்பாணத்தை ஓர் ஆரோக்கியமான நகராக உருவாக்குவதற்கு தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் எவ்வாறு உதவலாம்?

பிரிவு 1 தரம் 09, 10, 11

பிரிவு 2 தரம் 12, 13

**வரைதல் போட்டி**

திகதி: 14.12.2019)
நேரம்: காலை 9.00 மணி

*தொனிப்பொருள்* (45 நிமிடம்)

1. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் பாடசாலைகளின் பங்களிப்பு.
2. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்களிப்பு.
3. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் சந்தை மற்றும் உணவு விற்பனை நிலையங்களின் பங்களிப்பு.
4. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் வேலைத்தளங்களின் பங்களிப்பு.

**கட்டுரைப்போட்டி**

திகதி: 14.12.2019 | நேரம்: காலை 9.30 மணி முதல் 11:00 வரை

*தொனிப்பொருள்* (1 1/2 மணி | 2000 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்)

1. ஆரோக்கியமான யாழ் நகரத்தினை கட்டியெழுப்புவதில் மாணவர்களின் பங்கு
2. சீனி இல்லாது சுவைத்தல்: இது ஒரு சவால் அல்ல: குடும்பம் மற்றும் சமூகமட்டத்திலிருந்து எவ்வாறான மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன?
3. ஆரோக்கிய நகரொன்றில் ஆரோக்கிய வாழ்வுக்கு உடற் செயற்பாடுகளின் முக்கியத்துவம்.

**போட்டியாளர் 1/2 மணித்தியாலத்துக்கு முன்னர் சமுகமளிக்கவும்**

**இடம்: மாநாட்டு மண்டபம், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

தங்களது விண்ணப்பப்படிவங்களை முழுப்பெயர், முகவரி, பாடசாலை, தரம் மற்றும் தொடர்பிலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பாடசாலை அதிபரூடாக அல்லது கிராம சேவையாளரூடாக அல்லது தனிப்பட்ட முறையில் 09.12.2019 திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்

**விண்ணப்ப முடிவு திகதி - 09.12.2019**

தலைவர், சமுதாய மற்றும் குடும்பநல மருத்துவப் பிரிவு,
மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்.
தொலைநகல் : 021-222-2073 | மின்னஞ்சல் : sthuva1989@gmail.com
தொலைபேசி : 0779073773

**உலக சுகாதார ஸ்தாபனத்தால் சான்றிதழ்களும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்**

## கண்ணீர் அஞ்சலி

### பெருமாள் இராசமணி



தோற்றம்
05 . 12 . 1947


மறைவு
01 . 12 . 2019

கண்ணில் உயிரை வைத்துக் கொண்டு
இன்று காற்றில் கலந்து விட்டீர்களே அம்மம்மா !
இந்த மண்ணில் உங்களைப் போல் இனியாரை நாங்கள் காண்போம்
அன்னை அடித்தாலும் அரவணைத்து காத்தாயே அம்மம்மா
எத்தனை முறைதான் என்னை
நாளெல்லாம் அழைத்தாயே அம்மம்மா
இனி உங்களைப் போல் யார் அழைக்கக்கூடும்
உங்கள் உடலோடு இந்த வீடும் வெறிச்சோடிப் போனதே !

உங்கள் பிரிவால் துயருறும் :
பேரன் - கிருபா , பேர்த்தி - ரூபி,
பூட்டிமார் - அபினிஷா, ஹேமிஷா

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

## மரண அறிவித்தல்



### சூசைப்பிள்ளை செலஸ்ரின்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை செலஸ்ரின்பிள்ளை நேற்று (04.12.2019) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மரியம்மாவின் அன்புக் கணவரும் றஞ்சிதமலர், வசிகரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகீஸ்வரன், தயாபரி ஆகியோரின் அன்பு மாமனாரும் டினோஜினி - யேம்ஸ்குமார், டிக்சினி, கிசோனியா ஆகியோரின் அன்புப் பேரனும் பிறண்டனின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பத்திநாதர், பொன்னுத் துரை, பிறக்சிற், மேரிசெசிலியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சில்லாலை தூயகதிரை அன்னை ஆலயத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சில்லாலை தூய கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

(CS 24176)(04,17)

தகவல் :
குடும்பத்தினர்.

**076 347 8332**

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்
## 23ஆம் ஆண்டு-ஞாபகார்த்த தினம்

மண்ணில்
16.07.1936

விண்ணில்
05.12.1996



நாக மரம் எம் தேசிய மரம்
நாக மணி எம் சமூக வரம்
நீ அன்று நட்ட விதை இன்று
நீல வானமென உயர்ந்து
கல்வி, விளையாட்டு, ஆன்மீகம் கலையென
கரை கடந்து காட்டாறாய் ஓடுது
அன்று நீ கண்ட சமூக ஒற்றுமைக் கனவு
இன்று நனவாக முயலும் இந் நாளில்
உம் சிரம் தாழ்ந்து
நின்மலர் தூவி அஞ்சலிக்கின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையமும்
மற்றும் ஏனைய உப அமைப்புக்களும்.

Ac4271(13/17)

கோத்தா...

அந்தஅமைப்புவிடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகப் பதவியேற்று ஒருவார காலத்துக்குள் இலங்கையின் பத்திரிகை சுதந்திரத்தின் மீது அதன் தாக்கம் தெரிய ஆரம்பித்துவிட்டது. ஆரம்ப இலக்குகளாக நியுஸ்ஹப் எனப்படும் செய்தி இணையத்தளம் காணப்படுகின்றது. அதன் அலுவலகத்தை நவம்பர் 26ஆம் திகதி சோதனையிட்ட பொலிஸார் குறித்த இணையத்தளத்தின் கணினிகள், மடிக் கணினிகள் ஆகியவற்றில் உள்ளடக்கங்களை ஆராய்ந்தனர். நியுஸ்ஹப்பின் அலுவலகத்தை சோதனையிடுவதற்காக தாங்கள் அனுமதி பெற்றுள்ளதாக தெரிவித்து பொலிஸார் காண்பித்த ஆவணத்தில் 12 டிசெம்பர் 2018 என்ற திகதி காணப்பட்டது. அந்த ஆவணம் ஒரு வருடத்துக்குமுன்னர் காலாவதியாகிவிட்டது.

சுயாதீன செய்தி ஊடகத்தின் மீதான பொலிஸாரின் முழுமையான சோதனையும், குற்றவியல் நடைமுறைகள் மோசமாக மீறப்பட்டமையும் கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியின் கீழ் ஊடக சுதந்திரம் குறித்து கவலை தரும் சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளன - என்றுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி சதாசிவலிங்கம்

மண்டைதீவு. 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சதாசிவலிங்கம் 02.12.2019 சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (முத்துலிங்கம்) சதாசிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சுதாகர் (லண்டன்). சுஜாதா (லண்டன்). கவிதா (பிரான்ஸ்). திவாகர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவகி (லண்டன்). சண்முகதாஸ் (லண்டன்). குமரகுருபரன் (பிரான்ஸ்). நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வியாழாச்சி. லக்சுமி. மாரிமுத்து. கனகம்மா. விக்கினராஜா. கண்மணி மற்றும் சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கனகலிங்கம் காலஞ்சென்றவர்களான நாகலட்சுமி. இராசலிங்கம். சுந்தரலிங்கம். பழனித்துரை. குமாரசாமி. சிவசம்பு மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரவீன். பிரசாயி. காருண்யா. அபிராம். ஜனகா. சாயித்தியா. தனுசன். வர்மிஷன். பிரித்திகா. சயீசன். தரணிகா. அர்ச்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆதிவைரவர் வீதி,**
**மண்டைதீவு - 06**


(CS 29715)(14.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 221 4732/ 077 524 8549**

## மரண அறிவித்தல்

பிறப்பு
13
-
04
-
1948



இறப்பு
03
-
12
-
2019

### அருளப்பு றிச்சாட் அருட்பிரகாசம்

ஈழப்புரட்சி அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும் தலைவருமான கலாநிதி அருளப்பு றிச்சாட் அருட்பிரகாசம் (அருளர்) 03.12.2019 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கன்னாட்டி. லண்டன். யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த இவர் காலஞ்சென்றவர்களான யோசப் அருளப்பு திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் கலாவதியின் அன்புக் கணவரும் கல்யாணி (லண்டன்). மாதங்கி (மாயா - லண்டன்). சுகுமாரன் (லண்டன்)ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஐக்கிற்றின் அன்புப் பேரனும் கலாநிதி யோசப் பிள்ளை (லண்டன்). மேரியசிந்தா (ஜேர்மனி). இராசநாயகம் (கன்னாட்டி. வவுனியா). வசந்தா (கனடா). தியாகநாதன் (கனடா). ரஜனி (லண்டன்). யஸ்மின் (லண்டன்). ஜெகநாதன் (கனடா) காலஞ்சென்ற பொனவென்சர் (செல்வின்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4 ஆம் 5ஆம் திகதிகளில் இல. 33/1. கைலாசபிள்ளையார் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் 6 ஆம் திகதி வவுனியா கன்னாட்டி பண்ணையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 7 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் மடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**மன்னார் வீதி,**
**கன்னாட்டி, வவுனியா.**

(CS 29721)(14.17)

**தகவல்:**
**அ.எ.இராசநாயகம்.**

## மரண அறிவித்தல்

# சிவபாதம் தயாகுலன் (வவா)



சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் கோகுல வீதி, உரும்பிராய் மேற்கு அன்னுங்கை கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் தயாகுலன் (வவா) நேற்று முன்தினம் (03.12.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதம் (முன்னாள் அதிபர்) இன்பநாயகி (முன்னாள் ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், தருமலிங்கம் குணமணி தம்பதியரின் மருமகனும், ராகுலன், ராஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெகநாயகியின் அன்புக் கணவரும், ஜெயரூபன், சுஜீவன் (சுவிஸ்), விதுர்சிகா (மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), சிவாஜினி (மாணவி - யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, அன்னுங்கை,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.29704) (13.17)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.11.2019 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் புதியான் சின்னத்தம்பி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**புத்தூர் கிழக்கு,**
**சரஸ்வதி வீதி, புத்தூர்.**

**குடும்பத்தினர்.**

(CS 24189)(14.17)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சர்வானந்தன்
(ஆனந்தன்)



சரவணை கிழக்கு, 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சர்வானந்தன் (ஆனந்தன்) நேற்றுமுன்தினம் (03.12.2019) செவ்வாய் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.29704) (13.17)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் சண்முகானந்தம் (ஆசாரியார்)



காரைநகர் களபூமி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சண்முகானந்தம் (ஆனந்தம்) நேற்று **(04.12.2019)** புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் உடுப்பிட்டி இமையாணன் மேற்கு காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் சுபாஸ்கர் (சுபாஸ் ஒலி, ஒளி-அமைப்பாளர்) அவர்களின் அன்பு அப்பாவும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கனகராசா, கமலாதேவி, சற்குணராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலட்சுமி, கமலாதேவி, மயில்வாகனம் (மயில்), தவராசா (மல்லி), புஸ்பராணி காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் லோகேஸ்வரன், தயாளினி, கருணேஸ்வரன் (செட்டி), சுபேந்திரா, டில்லிராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(05.12.2019)** வியாழக்கிழமை பிற்பகல் **1:00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS2973)(10.17)

**இல.95, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

வெள்ளவத்தையில் அறைகள்
நாள் வாடகைக்கு உண்டு
•ஒருவருக்கு - 1300 •இருவருக்கு - 1950
•மூவருக்கு - 2500 இணைந்த குளியலறை
HOTEL VILLA, WALLAWATTE 077 796 7878

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## வரவு செலவுத்திட்டம் -2020

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2020ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2019.12.05ம் திகதி தொடக்கம் 2019.12.11ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் பொதுமக்கள் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(C 11884)(14.17)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம் நடேசு



**பிறப்பு** 10.01.1932 **இறப்பு** 03.12.2019

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் நடேசு நேற்றுமுன்தினம் (03.12.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் சின்னவர் நடேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னம்மா தம்பதியரின் மகளும், சின்னவர் - பொன்னு தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பூமாதேவி, குணரத்தினம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், துரைசாமி, காலஞ்சென்ற முருகவேல் மற்றும் கமலாம்பிகை, சடகோபன் (கோபு) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான தங்கம், ஆறுமுகம், ஜெகதீசன், சின்னப்பிள்ளை, துளசியம்மா மற்றும் இலட்சுமியார், சரவணமுத்து, கோடீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ராசன், மோகனா, சறோசா, லதா, பிரியா, நிமலன், முகுந்தன் ஆகியோரின் பெரியம்மாவும், வைரவநாதன், மகேந்திரன், வாணி ஆகியோரின் மாமியும், விநாயகமூர்த்தி, கருணாகரன், வினோபாஜி, ரகி, பாமினி, கவிதா, ரோசி, டெசிந்தா, அஞ்சி, காஞ்சி, பிரியா ஆகியோரின் பேர்த்தியும், பானுயன், பவதாரணி, விசாலினி, ஹரிஸ், வினுஷ், லதூஸ், மிலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை திருவடிநிலை இந்து மயானத்தில் நடைபெறுமென உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**வைரவநாதன், கருணாகரன், குணரத்தினம்,**
**சடகோபன், டெசிந்தா, சோமசுந்தரம்.**

**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

(cs.29718) 913.17)

# மரண அறிவித்தல்

**மலர்வு** 05 - 01 - 1943



**உதிர்வு** 01 - 12 - 2019

## பொன்னையா பத்மநாதன்

யாழ் - சரவணை கிழக்கு, வேலணை, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பின்னர் பிரித்தானியா Birmingham ஐ வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் அவர்கள் 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் மீனாம்பிகை (வேவி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் வதனி - (Birmingham, பிரித்தானியா), குமணன் (Birmingham, பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவரூபன் (Birmingham), துஷ்யந்தி(Birmingham) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருணிகாவின் அம்மப்பாவும் விருஷா, ஜனந்தன் ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் பேரின்பநாயகம் (சிவம்), காலஞ்சென்ற கனகநாயகம் (பரமு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் தியாகராசா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், மகாலிங்கம் மற்றும் சிங்கராசா(லண்டன்), ஞானசவுந்தரி (பிரான்ஸ்), பூபாலசிங்கம் (லண்டன்), தவமணி (யாழ்ப்பாணம்), மாலா (குருநாகல்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகீரதி, லீலாவதி, மங்களேஸ்வரி, சறோஜினிதேவி, நித்தியானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2019 ஞாயிற்றுக்கிழமை பிரித்தானியா - Birmingham இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**179/20, K.R. ஒழுங்கை,**
**பலாலி வீதி, கோண்டாவில்**
**071 400 1257**

**தகவல்: பொ.பேரின்பநாயகம்**
**(சகோதரன்)**

(CS 29721)(04.17)

தொடர்புகளுக்கு: **மீனாம்பிகை (வேவி - மனைவி) 00447930382442**
**வதனி (மகள்) 00447415408417**
**குமணன் (மகன்) 00447946485127** **தவரூபன் (மருமகன்) 00447415578133**

உ
சக்திதுணை

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**யோகாம்பிகை இராமலிங்கம்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28.11.1939 | 05.12.2017 |

திதி: துதியை (13.12.2019)

ஆண்டு இரண்டு ஆயினும் - எம்
ஆழ்மனதில் என்றும் - நீங்கள்
அணையா தீபமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறீகள்
பிறப்பவர் இறப்பது இயற்கையின் நியதி - எனினும்
பிரிவின் நினைவலைகளால் மனம் தவிக்கின்றது
அம்மா! நீங்கள் விண்ணுலகில் இருந்தாலும் - உங்கள்
ஆசியும் அன்புமே எம்மை அனுதினமும் வழி நடத்துகின்றது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய மனோன்மணி தாயை வேண்டுகின்றோம்

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(cs.29712(13.17)
என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# ஏழாம் ஆண்டின் நிறைவினிலே...



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02.01.1941 | 05.12.2012 |

**அமரர் சின்னப்பா குணரத்தினம்**
(ஓய்வுநிலை உப தபால் அதிபர் - கனகராயன்குளம்)
திதி:- அபரபக்க ஸப்தமி

அன்புடனே அனைவரையும் அரவணைத்து - நற்
பண்புடனே உறவுகளுடன் பழகிய எங்கள் அப்பா - நீங்கள்
விண்ணுலகம் சென்று ஏழாண்டானதுவோ - இம்
மண்ணில் நாம் வாழும்வரை எம்முடன் வாழ்வீர்களப்பா....

(IN/11851)(11.17)
நீங்கா நினைவுடன்

இல.695/2,
நாவலர்றோட்,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(ஸ்ரேசன் றோட், பனை)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 31 ஆம் நாள் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.05.1938 | 05.11.2019 |

**அமரர் செல்லையா சிவசம்பு**
(ஓய்வு பெற்ற அதிபர்)

கடந்த 05.11.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் 31 ஆம் நாள் ஆத்மசாந்தி நிகழ்வுகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எம்மோடு தோளோடு தோள் நின்று உதவிபுரிந்த சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (CS 29722)(14.17)

விமான நிலைய வீதி,
வளலாய், அச்சுவேலி.
குடும்பத்தினர்.
077 710 9476

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் **த.துஷாந்த்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**கந்தையா தனபாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
சண்டிலிப்பாய் கோட்டம்,
முன்னாள் அதிபர்- யா/நடேஸ்வராக்கல்லூரி)
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்,
யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி
CS29732 (15/17)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

**வேலுப்பிள்ளை மாணிக்கம்**



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25.12.1953 | 05.11.2019 |

அன்புக்குரிய அம்மா :
கருவறைக்குள் கருணை கொண்டது மரணம்
அம்மா தனித்து இருக்கின்றோம்
கண்கள் இரண்டும் பனித்திருக்கின்றோம்
பாதிக் கதை சொன்னாய் அம்மா
மீதி கதை சொல்லவில்லையே
சடுதியில் வந்தகாலன் சடுதியில் கவர்ந்து விட்டான்
அம்மா ! அம்மா என்ற அழுகுரல் கேட்கிறதா ?
எப்பிறப்பில் காண்போம் இனி
நடமாடிய தெய்வம் வீட்டில் படமாகியதே !
சாந்தி ! சாந்தி !!

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
(CS 5726) (14.17)
பிள்ளைகள்.

# ஈர விழிகளுடன் 14 ஆம் ஆண்டு நினைவாராதனையும் 33 ஆவது ஆண்டு பிறந்தநாள் நினைவலைகளும்

**அமரர் விஜேந்திரன் பிரதீபன்**

| வையத்துள் | தெய்வத்துள் |
|---|---|
| 01.02.1986 | 05.12.2005 |



என்வாசம் நீ என் சுவாசம் நீ
மறைந்தாய் நீ மாறியது
எல்லாம்
துயரத்தைச் சுமக்கும் மனது
தூக்கத்தை மறந்த விழிகள்
ஏக்கத்தைக் கூட்டும் நினைவு
என்றும் மாறாத சோகம்
இன்று இவை எமது சொந்தம்

உமது ஆத்ம சாந்திக்காக எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரந்தன்.
(CS29676)(11.17)
அன்ரி

மூத்த ஊடகவியலாளர்
அமரர் **பி.எஸ். பெருமாள்** அவர்களின்

# 31 ஆம் நாள் நினைவுப்பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும்



காலம் : 05.12.2019 வியாழக்கிழமை (முற்பகல் 11.00 மணி)
இடம் : சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

13 A 1/3, புறூடி ஒழுங்கை,
அரியாலை.
(cs.0906) 913.17)
குடும்பத்தினர்.

## யாழில் மழை காரணாக 44 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றுமுன் தினம்வரை தொடர்ந்த மழை காரணமாக 23 வீடுகள் சேதமடைந்துள்ளன. 44 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் தத்தமது வீடுகளை விட்டு வேறிடங்களில் தங்கியுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுத் தகவல் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 3 நாள்களாக நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவின் 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இங்கு 24 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 6 குடும்பங்களையும் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 12 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் வேறு இடத்தில் தங்கியுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. அந்த வீட்டில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாவட்டத்தில் மொத்தம் 23 வீடுகள் சேதமடைந்துள்ளன. 44 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். என்று இடர் முகாமைத்துவப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்தன. (கு-105)

## கரவெட்டிப்பிரதேசத்தில் 160 பேருக்கு டெங்கு

வடமராட்சி,டிசெ.5

டெங்கு நோயால் கரவெட்டிப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகார பிரிவில் கடந்த நவம்பர் மாதம் வரை 160 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

டெங்கு நோய்க்குள்ளானோருக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

டெங்கைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார மருத்து அதிகாரி பிரிவினர் ஈடுபட்டுள்ளன. (ஐ-173)

## விநாயகர் கதை விரதம்

வடமராட்சி,டிசெ.05

இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் விரதங்களில் ஒன்றான "விநாயகர் கதை விரதம்" எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறவுள்ளன.

விநாயகர் ஆலயங்களில் 21 நாள்களும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும். அந்த வகையில் வடமராட்சி நாகர்கோவில் வடக்கு கௌந்தந்துறைப் பிள்ளையார் ஆலயத்திலும் தினமும் காலை 9.30 மணிக்கு சிறப்பு வழிபாடு இடம்பெறவுள்ளன. ஜனவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமை இரவு சுவாமி வெளிவீதி உலா வந்து தீர்த்தக்கேணியில் தீர்தமாடி அடியார்களுக்கு அருள் பாலித்தருளுவார். மறுநாள் 2 ஆம் திகதி வியாழக் கிழமை காலையில் பாரணைப்பூசையுடன் பிள்ளையார் கதை விரத நிகழ்வுகள் நிறைவு பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-173)

Dialog
MEGA
அதிஷ்டம்

சனிக்கிழமை
இரவு 7.56 க்கு
சக்தி TV
ஊடாக

## வெற்றியாளர்கள்



ரூ.10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர்
A.A. தொன் நெவில் - மாஹூவெவ



Y.A. நந்தசேன
மந்தாவ



H.N. குணவர்தன பர்ணாந்து
பாணந்துறை



K.H.R. வசந்த குமார
தடயம்தலாவ



S.N. சஞ்சீவ குலதுங்க
கலபிடமட

**இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,769,232/-**

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 24 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 10 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 198 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 1,195 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசுக்குவியல்
**#121#** டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
2019

Dialog
an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

# MASSIVE VEHICLES AUCTION SALE



**10th of December**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 07th & 09th December**

(Please refer the Udayan On 06th of December 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
### வெளிவாரிப் பரீட்சைகள்

**கலைமாணி – பகுதி – II – 2016 (இறுதிச் சந்தர்ப்பம்)**

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைகளுக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 27.12.2019 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக (www.codl.jfn.ac.lk) அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
**04.12.2019**

(C 11885)(14.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை
## ஒப்பந்தகாரர்களையும், வழங்குனர்களையும் பதிவு செய்தல் - 2020

சபையானது 2020 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குனர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருள்கள்**
01. காகிதாதிகள் எழுதுபொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருட்கள்
05. கற்கள், மணல், கிரவல்
06. தீந்தைவகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருட்கள்
07. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைப்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
09. மின்வழங்கும் பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
10. எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள்
11. இரும்புப்பொருட்கள்
12. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
13. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
14. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
15. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
16. பாதணிகள், தோற்பொருட்கள்
17. இலத்திரனியல் பொருட்கள்
18. வாகன சுத்திகரிப்பு பொருட்கள்
19. இறப்பர் முத்திரை தயாரித்தல்

**2.சேவைகள்**
01. அச்சிடுதல்
02. மோட்டார் வாகனம், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
05. மீளமின் வலுவூட்டல்
06. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)

**3.ஒப்பந்தவேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)**
01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண / திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நாட்களில் மு.ப.8.30 - பி.ப. 3.00 மணிவரையும் பிரதேசசபை வெங்கலச்செட்டிகுளம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் விண்ணப்பக்கட்டணமாக ரூபா 1000.00 உம் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 உம் செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2020 எனக்குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் தவிசாளர், வெங்கலசெட்டிகுளம் பிரதேசசபை, மன்னார்- மதவாச்சி வீதி, செட்டிகுளம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் **26.12.2019** ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு **024-2260060** அல்லது **024-2260914** எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,**
**பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம்,**
**05.12.2019**

# பழைய முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்

## கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம்

கொழும்பு, டிசெ. 5

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையில் நடாத்துவதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடங்களுக்குக் கருத்து த் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் வருடம் ஏப்ரல் மாதம் 25, 26 அல்லது 27 ஆகிய ஏதாவதொரு திகதியில் நடத்தக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இந்தக் கலந்துரையாடலின்போது குறிப்பிட்டார். எதிர்வரும் மார்ச் மாத ஆரம்பத்தில் அரச தலைவரால் நாடாளுமன்றம் கலைக்கப்படுமாயின், குறித்த தினத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக் கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதேபோல், எல்லை நிர்ணயம் நடவடிக்கைகள் இதுவரையும் முறையான நிலையில் இல்லாமையால், மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையிலேயே நடத்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் உடன்பட்டுள்ளனர்' என்றார். (ம-22)


### அரசாங்க அறிவித்தல்
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**
**ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு**

31.10.2019ம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2020ம் ஆண்டிற்கான ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் சம்மந்தமான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்ட பதிவுக்கான இறுதித் திகதி 24.12.2019ம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**நா.வேதநாயகன்,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

(C 11886)(14,17)

### பெயர் மாற்றம்

கோயிற்புலம், தெல்லிப்பளையில் வசிக்கும் மு. சந்திரகுமாரன் ஆகிய நான் எனது மகனின் இதுவரையிலும் **ச.ஸ்ரீராம்** என்று இருந்த பெயரை இன்று முதல் **ச. ஸ்ரீராம்ஜி** என்று பெயர் மாற்றம் செய்கிறேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
இனி வ்ரும் காலங்களில் அவரது பெயர் **ச.ஸ்ரீராம்ஜி** என்றே அழைக்கப்படுவார் என்று அறியத்தருகின்றேன்.

### மணமக்கள் தேவை

யாழிந்து உயர்குலம் 78 ரோகிணி, 79 மூலம், 81 மூலம், 79 பூசம், 81 திருவோணம், 84 சதயம், 85 அனுசம், 84 பூராடம், 77 மிருகசீரிடம், 76 மிருகசீரிடம், 81 அத்தம் Pr உள்ள மணமக்களுக்கும், 86 இந்து இஞ்சினியர் மணமகனுக்கும், 82 சதயம் இந்து, 86 பரணி கௌரவ கனடா மணமகளுக்கும் உள்நாட்டு படித்த மணமக்கள் தேவை.

தொடர்பு:- 0044 742409 2585

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
**Nissan B II** - சில்வர் நிறம் கார் உடன் விற்பனைக்கு விலை. 460,000/=

**077 668 8927**

### கொடிபதி கப்ருக

H 02 13 33 56

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,995,100/-

மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சீட்டிழுப்பு வாரம்: 528 | திகதி: 2019 டிசம்பர் 03
வர்ணம்: இளஞ்சிவப்பு | செவ்வாய்

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

### ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 04.12.2019 | 2697 | பச்சை |

கடகம்

வெற்றி இலக்கங்கள்: 17 38 55 57

வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,808,824/=

05.12.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சீட்டிழுப்பு இல: 811
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.04

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,333,565/-

வெற்றி இலக்கங்கள்: 13 43 62 75
ஆங்கில எழுத்து: J

அபிவிருத்தி லொத்தர் சபை

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல.: 3270 திகதி: 2019.12.04
ஊதா புதன்கிழமை

விசேட இலக்கம் 9799

வெற்றி இலக்கங்கள்: 16 59 61 68
ஆங்கில எழுத்து: Z

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 31,038,485/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 302
சீட்டிழுப்பு திகதி ▸ 04.12.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| Q | 06 17 32 | 08 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 47,911,476/=

06.12.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

### UPGRADE YOU | BLC CAMPUS

QUEST | LINCOLN UNIVERSITY COLLEGE



ஆங்கிலத்தில் உரையாடுவது உங்களுக்குப் பிரச்சினையா?

ஆங்கில மொழிப்பயிற்சி மற்றும் ஆளுமை விருத்திப் பாடநெறி

**காலம் 6 மாதங்கள்**

அனுபவமிக்க விரிவுரையாளர்களின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் பேசுதல் மற்றும் எழுதுதல் போன்ற தனிநபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பெறுமதிமிக்க பயிற்சி நெறி. எமது BLC CAMPUS இனால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் உங்களை ஆங்கில மொழியில் சரளமாகப் பேச வைப்பதே எமது ஒரே குறிக்கோளாகும். நீங்கள் எம்முடன் இணைந்துகொள்ள விரும்பினால் இன்றே எம்முடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**கல்வித் தகைமை**
க.பொ.த. சாதாரணதரம்




உள்ளடக்கம்
- Grammar (இலக்கணம்)
- Spoken English & Practical Use of English (ஆங்கிலத்தில் உரையாடுதல் மற்றும் நடைமுறைப் பிரயோகம்)
- English for Businesses (வர்த்தகத்திற்கான ஆங்கிலம்)
- Communication skills (தொடர்பாடல் திறமைகள்)
- Presentaion skills (எடுத்தியம்பும் திறன்)
- Personality Development (ஆளுமை)

உடன் அழையுங்கள் **0777174443**
www.blccampus.edu.lk

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

# பரீட்சை வாழ்வின் அத்திபாரம்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

சி.நற்குணலிங்கம்


பரீட்சை என்பது மாணவர்கள் கொண்டுள்ள அறிவின் பெறுமானங்களைத் தீர்மானிக்கும் ஒரு செயல் முறை. இது மாணவர்களின் வாழ்வின் பாதையைத் தீர்மானிக்கும் காரணியாகும். கட்டாயமாக எதனையும் நிரந்தரமாக ஈட்டித் தரும். விரும்பிக் கற்கும் மாணவர்கள் தான் பரீட்சையை இலகுவாக அணுக முடியும். கற்றலானது ஈடுபாட்டுடனும் உற்சாகத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டும். பரீட்சையைத் சோதனையாக்கி, வேதனை கொள்ளாதிருக்க கற்றலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். பரீட்சை அண்மித்துள்ள வேளையில் கற்றல் சிறப்புற அமையுமானால் அல்லது அமைந்திருக்குமானால் பரீட்சைப் பயம் ஏற்படமாட்டாது. ஏற்பட்வும் கூடாது. அது தடுமாற்றத்தை ஏற்படுத்தும். அதற்கு மாணவர்கள் இடம் கொடுக்கக் கூடாது.

### ஞாபகத்திறனை மேம்படுத்துங்கள்

கற்றலில் மிக முக்கியமானது கற்றவற்றை ஞாபகப்படுத்திக் கொள்வதாகும். கற்றலின் நோக்கம், ஊக்கம் மன ஒன்றித்தல் முக்கியமாகும். குறிப்பெடுத்துக் கற்றல், கற்றவற்றைச் சொல்லிப் பார்த்தல், எழுதிப் பார்த்தல், பயிற்சிகள் செய்தல் மகிழ்ச்சியாகப் கற்றல், மன அழுத்த மற்றுக் கற்றல் என்பவை மூலம் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும். பாடங்களை முன்னுரிமைப்படுத்திக் கற்க வேண்டும். கடினமான பாடங்களை கூடிய நேரமும், கடினமான அலகுகளைக் கூடிய நேரமும் ஒதுக்கிக் கற்க வேண்டும். ஆனால் எல்லா அலகுகளும் படிக்கப்பட்டிருக்க வேண்டும். தனித்துப் படிக்கக் கடினமானவர்கள் பரீட்சைக்கான சகபாடியுடன் இணைந்து கற்கலாம். கற்றலில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டும். உங்களுக்கு ஏற்ற கற்றல் நுட்பங்களை நீங்கள் பின்பற்றுவதன் மூலம் நேரம் மீதப்ப டுத்தப்படும்.

### திட்டமிட்டு கற்க வேண்டும்

பாட ரீதியில் உயர் அடைவை பெற்றுக்கொள்ளும் வகையில் கற்றல் செயற்பாடு வகுத்துக் கொள்ளப்பட வேண்டும். பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை மையப்படுத்தி கற்றலைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். பின்னுக்கு வரும் பாடங்களை முதலில் தொடங்கி பின்னோக்கிப் பாடங்களைப் படிக்க வேண்டும். கற்கும் நேரத்தை நீட்டக் கூடாது. அதாவது தொடர்கற்றல் தவிர்க்கப்பட வேண்டும். இடைவிட்ட கற்றலே அலுக்காத கற்றலாகும். பரீட்சைக்காலத்தில் இரவு 11 மணிக்குத் தூங்கி காலை 4 மணிக்கு எழுந்து கற்கலாம். இவ்வேளை முழுமையான கற்றலை விடுத்து குறிப்புக்களை மட்டும் பார்க்க வேண்டும். பரீட்சைக்கு முதல் நாள் கற்றல் திருப்தியும், தன்னம்பிக்கையும் ஏற்பட வேண்டும். பொதுப் பரீட்சை என்பது வழக்கமான பரீட்சைகளில் ஒன்று தான் என அதனை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் தெளிவிருந்தால் பரீட்சைப் பயம் மாணவர்களை விட்டு அகலும். எக்காரணம் கொண்டும் பதற்றப்படக் கூடாது.



### நம்பிக்கை வையுங்கள்

நேரசூசியை நன்றாகப் பார்க்க வேண்டும். பரீட்சையின் போது ஒவ்வொரு நாளும் உற்று நோக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் பெற்றோரும் கூடிய கவனமும், ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். சில நாள்களில் காலையும், மாலையும் என இரு வேளையும் பரீட்சை இருக்கும். இவ்விடயத்தில் சிலமாணவர்கள் தவறுவிடுவதும், தவறுவதும் உண்டு. பரீட்சை தொடர்பாக வரும் வதந்திகளையும், நம்பக் கூடாது. வதந்தியை நம்பி பரீட்சையை கோட்டை விட்டோரும் உள். இது ஏனைய பாடங்களை முறையாக எழுதுவதற்கும், தடையாக அமையும். உங்கள் நேரசூசியில் மட்டும் நம்பிக்கை வையுங்கள். அது உங்களை நேர்த்தியாகக் கொண்டு செல்லும். பரீட்சை வேளையில் அதிக நேரம் விழித்திருந்து படிப்பதை தவிர்க்க வேண்டும். இது மன அமைதிக்கு இடையூறாக அமையும் அத்துடன் உணவு விடயத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். சமிபாட்டுக்குக் கஷ்ரமான உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.



### பரீட்சைக்கு தயாராகுங்கள்

பரீட்சை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்னரே பரீட்சை மண்டபத்துக்கு செல்ல வேண்டும். கொண்டு போவதற்கு அனுமதியற்ற கணிப்பான், கைபேசி, எலக்றோனிக் சாதனங்களைத் தவிர்த்து பரீட்சைக்குத் தேவையான கணித உபகரணங்கள், அடையாள அட்டை, அனுமதி அட்டை என்பன மட்டுமே எடுத்துச் செல்லப்பட வேண்டும்



### பரீட்சை எழுதும் முறை

மண்டபத்தில் வினாப்பத்திரத்தைப் பெற்றவுடன் முதலில் அறிவுறுத்தல்களை அவதானமாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிக வினாக்களுக்கு விடை யளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். விடை யளிக்கவுள்ள வினாக்களை எண்ணிக்கை அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்துக்குள் விடையளிக்க நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும். விடை எழுதும் போது வினாக்களின் இலக்கங்களே இடப்பட வேண்டும். சிலர் அதற்குப் பதிலாக தொடர் இலக்கங்களை எழுதுவதும் உண்டு. இது தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் சுட்டெண் சரியாக எல்லா விடைப்பத்திரத்திலும் எழுதப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். விடையளிப்புப் பத்திரம் தேவையான அளவு பெற்றுக்கொள்ளலாம். எனவே வசதியாக விடையளிக்கவும் விடை எழுதுவதற்கு முன்னர் கேள்விகளை ஒருமுறைக்கு இருமுறை நன்றாக வாசித்து வினாக்களின் நோக்கத்தைப் புரிந்து நிதானமாக விடையளிக்க வேண்டும். விடைகள் யாவும் எழுதிய பின்னர் 5நிமிட நேரத்துக்குள் விடைத்தாள்களை பக்க இலக்கங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். கட்டிய பின்னரும் உரிய நேரம் வரும்வரை விடை எழுத வேண்டியிருப்பின் எழுதலாம்.

### நல்ல பெறுபேறு

ஒரு பாடம் முடிவடைந்த பின் அந்தப் பாடம் தொடர்பாக எதுவும் சிந்திக்கக் கூடாது. மற்றவர்களுடனும் எழுதிய விடைகள் பற்றி கலந்துரையாடவும் கூடாது. பெற்றோரும் இதுபற்றி அலட்டிக்கொள்ளக் கூடாது. அடுத்த பாடம் தொடர்பாகவே தங்கள் கவனம் ஈர்க்கப்பட வேண்டும். இது எல்லாப் பாடமும் முடியும்வரை ஒரு செயல்முறையாக இருக்க வேண்டும். மன நிறைவாகவும் அமைதியாகவுமிருக்க சலனமற்ற மனநிலையில் பரீட்சையை அணுகி உங்களுக்கும், பெற்றோருக்கும், பாடசாலைக்கும், சமூகத்துக்கும் நல்ல பெறுப்பேற்றையும் நற்பெயரையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பரீட்சை முடிவு வெளிவரும் வேளை, பெற்றோர் பிள்ளையின் பரீட்சை முடிவு. தொடர்பாக கூடிய எதிர்பார்ப்பை கொண்டிருக்கக் கூடாது. கூடிய எதிர்பார்ப்பை கொண்டிருப்பதாகப் பிள்ளையிடம் கூறவும் கூடாது. பரீட்சை முடிவு சிலவேளை பாதகமாக வருமாயின் பிள்ளையின் முடிவும் பாதகமாக அமையலாம்.

மாணவர்களுக்கு கடின உழைப்பும் விடா முயற்சியுமே வாழ்க்கையில் வெற்றியைத் தரும் என்பதைப் பெற்றோர் புரிய வைக்க வேண்டும். மாணவர்களுக்குத் தேவை பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமல்ல என்பதையும் கூறிவைத்தல் வேண்டும்.

இன்றே உங்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் உங்களது வாழ்வின் அத்திபாரப்புள்ளிகள் என்பதை மறந்து விடாதீர்கள். உங்கள் பெறுபேற்றுக்கு அமைய, நீங்கள் கற்க வேண்டிய துறையை நீங்களே தெரிவு செய்து கற்று, ஆளுமையுள்ள பண்பான, இனப்பற்றுள்ள, பிரதேசப்பற்றுள்ள, சிறந்த சமுதாயம் சமைத்து சாதனைகள் படைக்க எழுந்து வாரீர். நாளைய சமூகம் உங்கள் கையில்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : .news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com




## கவலைதரும் தரவுகள்

'2019 ஆம் ஆண்டுதான் பருவநிலை ஆர்வலர்களுக்கு மோசமான ஆண்டு' என்று குறிப்பிடுகிறது ஐக்கிய நாடுகள் சபை. உலக வெப்பமயமாதல் குறித்து தான் நடத்திய ஆய்வின் அடிப்படையில் மேற்குறித்த எச்சரிக்கையை எடுத்தியம்பியுள்ளது அது. இந்த ஆண்டில்தான் இதுகாலும் இல்லாத அளவுக்கு பூமியை சூரிய வெப்பம் தாக்கியுள்ளது என்கின்றன புள்ளிவிவரங்கள். ஐ.நா ஆய்வின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய தரவுகளும் பாரதூரமானவை. கவனிக்கத் தக்கவை.

கடல்நீரில் இருந்த அமிலநச்சு கடந்த 150 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையைக் காட்டிலும் தற்போது 25 சதவீதம் அதிகரித்துள்ளது, இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் சுமார் 10 மில்லியன் மக்கள் அதாவது ஒரு கோடிப் பேர் பூமி வெப்பமயமாதல் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர், டிசெம்பர் முடிவுறும் தறுவாயில் இந்த எண்ணிக்கை 2 கோடியே 20 லட்சமாகும், ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் அதிகளவு அனல்காற்று வீசியுள்ளது என்றெல்லாம் பல தரவுகளை எடுத்தியம்பி மிகப்பெரும் எச்சரிக்கைத் தொனியை உரக்க எழுப்பியுள்ளது உலக அரங்கத்தின் இதயம்.

பூமி வெப்பமாவதற்கு தொழில் புரட்சிகளே அத்திபாரமிட்டன. அதன் பின்னர் இடம்பெற்ற உலகப் போர்கள் பூமியின் வெப்பத்தை முழு வீச்சில் சவாலுக்கு உட்படுத்தின. தற்போது இடம்பெற்றுவரும் ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகள், மத்திய கிழக்கில் இடம்பெறும் எண்ணெய் எரிப்பு நடவடிக்கைகள், பிரேசில் போன்ற தென்னமெரிக்க நாடுகளில் இடம்பெறும் காடழிப்பு நடவடிக்கைகள் என்பன இன்று பூமி வெப்பமாதலுக்கும், துருவப்பகுதிகள் அழிவதற்கும் தொடர்ந்தும் தூபம் இட்ட வாறுதான் உள்ளன.

பூமி வெப்பமாதல் என்பது இலங்கையின் முதன்மைப் பிரச்சினை. எமது நாடு ஒரு தீவாக இருக்கின்ற காரணத்தால் கடல்நீர் மட்ட உயர்வு என்பது இலங்கையை முழு வீச்சில் பாதிக்கவல்லது. ஆனால் இந்த அவலநிலைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை இன்று எம்மத்தியில் உள்ளதா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சமீப காலமாக பருவநிலை மாற்றத்துக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் எமது நாட்டிலும் அவசியம் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் ஒரு தீவு நாடு என்ற அடிப்படையில் துருவங்களின் இருப்பே இலங்கையின் இருப்பு.

# இந்தோ-பசுபிக் பிராந்திய அரசியல் போட்டிக்குள் சிக்கப்போகும் இலங்கை

மைத்திரி-ரணில் அரசு இலங்கையின் அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை 99 வருடங்களுக்குச் சீனாவின் தனியார் நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச இல்லாமல் செய்யவுள்ளதாக வெளியான செய்தியை அடுத்து சீன அரச தலைவரின் சிறப்பு பிரதிநிதியொருவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.



சீன - இலங்கை நட்புறவு பாதிக்கப்படாத வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் குறித்து மீளாய்வு செய்யும் நோக்கில் சீனாவின் சிறப்புப் பிரதிநிதி கொழும்புக்கு வந்துள்ளார் எனக் கொழும்பில் உள்ள சீனத்தூதரகம் கூறியுள்ளது. இலங்கைக்கான முன்னாள் தூதுவர் வு ஜியாங்காவோ சிறப்புப் பிரதிநிதியாகக் கொழும்புக்கு வந்துள்ளார்.

தூதுவர் வுஜியாங்காவோ தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவை சந்தித்து உரையாடியுமுள்ளார்.

சீன - இலங்கை நட்புறவு பாதிக்கப்படாத வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் குறித்து மீளாய்வு செய்ய மகிந்த ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார் எனச் சீனத் தூதரகம் கூறுகின்றது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான நிதியுதவிகள், தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் சிறப்புப் பிரதிநிதி வு ஜியாங்காவோ, மகிந்த ராஜபக்சவுடன் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பில் கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் செங் எக்சியு ஒன் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

கொழும்புக்கு வருகை தந்த சீனப் பிரதிநிதி அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவைச் சந்திக்க முன்னர் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் குறித்துப் பேசியமை தொடர்பாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

2017 ஆம் ஆண்டு தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். இதனால் இந்தியா கடும் எதிர்ப்பும் வெளியிட்டிருந்தது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை போர்க்கப்பல் நிறுத்தும் தளமாக சீனா பயன்படுத்தும் என்றும் இதனால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அப்போது இந்தியா எச்சரித்திருந்தது.

புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச சென்றவாரம் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். இந்த நிலையிலேதான் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவின் தனியார் நிறுவனத்துக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கியிருந்த ஒப்பந்தத்தை, கோத்தபாய ராஜபக்ச இல்லாமல் செய்யத் தீர்மானித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இல்லாமல் செய்வது தொடர்பான இந்தத் தகவலை இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் தற்போது தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் பொருளாதார ஆலோசகராகவுமுள்ள அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார் என ஆங்கிலச் செய்தித் தளம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்புக்கு வந்துள்ள சீன அரச தலைவரின் சிறப்புப் பிரதிநிதி அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தை மீள் ஆய்வு செய்வது குறித்துப் பேசியுள்ளார். இதற்கு மகிந்த ராஜபக்ச இணக்கம் தெரிவித்திருந்தார் எனச் சீனத் தூதுரகம் கூறியபோதும் இதுவரை இலங்கை அரசு அது தொடர்பாகக் கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடக் குத்தகைக்குக் கொடுப்பதற்காக மைத்திரி - ரணில் அரசு செய்த ஒப்பந்தத்தை பதவிக்கு வந்ததும் இல்லாமல் செய்வேன் என்று கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தல் பரப்புரைகளின்போது கூறியிருந்தார்.

சென்ற வாரம் இரண்டு நாள் பயணமாக இந்தியாவுக்குச் சென்றிருந்த கோ்த்தபாய ராஜபக்ச பொருளாதார ரீதியான பல திட்டங்களுக்கு இண்க்கம் தெரிவித்திருந்தார். சுமார் நானூற்றி ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக இந்தியாவும் உறுதியளித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சீனாவின் சிறப்புப் பிரதிநிதி கொழும்புக்கு வந்துள்ளார். எவ்வாறாயினும் இந்தோ பசுபிக் பிராந்திய அரசியல் போட்டிக்குள் வேறொரு விதமாக இலங்கையின் புதிய அரசு சிக்குப்படப் போவதாகவே அவதானிகள் கூறுகின்றனர். இந்தியாவையும், சீனாவையும் இலங்கை கையாளப்போகும் புதிய உத்தி, இலங்கையில் உள்ளக முரண்பாடுகளையே மேலும் தோற்றுவிக்கலாமென அவதானி கள் கருதுகின்றனர். ■

*- நன்றி: கூர்மை இணையம்*

1967ஆம் ஆண்டு நாட்டின் எல்லைகள் எப்படி இருந்தனவோ அதே நிலையை மீண்டும் ஏற்படுத்தினால்தான் இங்கே இஸ்ரேல், பாலஸ்தீனம் என்ற இரு நாடுகள் அரசை ஏற்க முடியும் என்று பாலஸ்தீனர்கள் தெளிவாகக் கூறிவிட்டனர். அத்துடன் எதிர்கால பாலஸ்தீன அரசுக்குத் தலைநகரமாகக் கிழக்கு ஜெருசலேம்தான் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். ஜெருசலேம் தொடர்பாக எந்த வாக்குறுதியும் தர மறுக்கிறது இஸ்ரேல் அரசு.



# இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு அமெரிக்காவின் ஆதரவு ஏற்புடையதல்ல

மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனர்களை விரட்டிவிட்டு ஆக்கிரமித்த பகுதியில் ஏற்படுத்தியுள்ள இஸ்ரேலியக் குடியிருப்புகள், 'சட்ட விரோதமானவை அல்ல' என்று ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு பன்னாட்டுச் சட்டங்களுக்கும், உலக நாடுகளிடையே இந்த விவகாரத்தில் ஏற்பட்டிருந்த கருத்து ஒற்றுமைக்கும் பெரிய சவாலாக இருப்பதுடன், இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையில் ஏற்கெனவே தேக்கமடைந்த நிலையில் இருக்கும் சமரச முயற்சிகளை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

ட்ரம்ப் அரசு எந்தவித நிபந்தனையும் இன்றி யூதர்களின் தேசத்தை ஆதரிக்கிறது. ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகரமாக ஏற்றுக் கொள்வதாக 2017ஆம் ஆண்டு டிசெம்பரில் அறிவித்தார் ட்ரம்ப். அதுவே சர்ச்சைக்குரிய முடிவுதான் அடுத்து, இந்த ஆண்டு மார்ச் மாதம், கோலான் குன்றுகளை இஸ்ரேலின் பகுதியாக ஏற்பதாக அறிவித்தார்.

1967ஆம் ஆண்டு நடந்த போரில் சிரியாவிடமிருந்து இஸ்ரேல் கைப்பற்றியதுதான் கோலான் குன்றுகள். இவை போதாது என்று இப்போதைய இந்த அறிவிப்பு இஸ்ரேலின் வலதுசாரிகளுடைய கரங்களை வெகுவாக வலுப்படுத்திவிடும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பன்னாட்டு நீதிமன்றம் என்று பன்னாட்டு அமைப்புகள் எல்லாம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புகளைச் சட்ட விரோதமானவை என்று அறிவித்துள்ளன.

தான் ஆக்கிரமித்த நிலப்பகுதியில், தனது நாட்டு மக்களை எந்த நாடும் குடியேற்றக் கூடாது என்று ஜெனீவாவில் நடந்த நான்காவது பன்னாட்டு மாநாட்டில் ஏற்கப்பட்டது. இஸ்ரேலோ அந்த முடிவுக்கு எதிராகத்தான் பல ஆண்டுகளாகச் செயற்பட்டுவருகிறது. மேற்குக் கரையில் இப்போது 4 லட்சம் யூதர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீனர்களின் தாக்குதலிலிருந்து இஸ்ரேலியர்களைப் பாதுகாப்பதற்காகச் சுவர் கட்டுவதாகக் கூறி, மேலும் அதிக பரப்பளவை ஆக்கிரமித்திருக்கிறது இஸ்ரேல். இவை பாலஸ்தீனர்களின் நடமாட்டத்தை அடியோடு குறுக்கிவிட்டது.

1967ஆம் ஆண்டு நாட்டின் எல்லைகள் எப்படி இருந்தனவோ அதே நிலையை மீண்டும் ஏற்படுத்தினால்தான் இங்கே இஸ்ரேல், பாலஸ்தீனம் என்ற இரு நாடுகள் அரசை ஏற்க முடியும் என்று பாலஸ்தீனர்கள் தெளிவாகக் கூறிவிட்டனர். அத்துடன் எதிர்கால பாலஸ்தீன அரசுக்குத் தலைநகரமாகக் கிழக்கு ஜெருசலேம்தான் இருக்க வேண்டும் என்றும் வ்லியுறுத்தியுள்ளனர். ஜெருசலேம் தொடர்பாக எந்த வாக்குறுதியும் தர மறுக்கிறது இஸ்ரேல் அரசு.

1948ஆம் ஆண்டு போரின்போது வெளியேறிய பாலஸ்தீன ஏதிலிகள் மீண்டும் திரும்பும் உரிமையையும் இஸ்ரேல் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

அடுத்தது, எதிர்கால பாலஸ்தீன அரசின் எல்லை எது என்பதாகும். மேற்குக் கரையின் பெரும் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்து யூதக் குடியிருப்புகளை ஏற்படுத்தி, தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்டது. குடியிருப்புகளை ஏற்படுத்துவதை நிறுத்துங்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை எத்தனையோ முறை கேட்டுக்கொண்டது. அதற்கு இஸ்ரேல் செவிமடுக்கவே இல்லை. அப்படிப்பட்ட யூத அரசுக்கு விருது வழங்குவதைப் போல ட்ரம்ப் அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. இஸ்ரேல் இப்படியே தொடர்ந்து பிடிவாதமான ஆக்கிரமிப்பாளராக இருந்தால் இரு நாடுகள் பிரச்சினை என்பது தீர்க்க முடியாததாகவே தொடரும். ■

*-நன்றி: இந்து தமிழ் திசை*

ஆசிரியருக்கான கடிதம்

# வரவேற்கத்தக்க மாற்றம்

அண்மையில் இணுவிலில் உள்ள எனது நண்பர் ஒருவரின் புதுமனைப் புகுவிழாவுக்குச் சென்றிருந்தேன். கோயிலில் இருந்து மங்கலப் பொருள்களை எடுத்து வந்தனர். ஒரு தட்டில் புத்தகத்தையும் வைத்துக் கொண்டு வந்தனர். உற்றுப் பார்த்தேன். அது 'சைவத் திருமுறைத் திரட்டு'

அதனைச் சாமியறைத் தட்டில் வைத்தனர். பால் காய்ச்சப்பட்டு படத்துக்குப் பூசை நடைபெற்றபின் ஒருவர் அந்த திருமுறைப் புத்தகத்தை எடுத்து திருமுறை ஒழுங்கில் அரை மணித்தியாலத்துக்கு மேலாக நன்றாக ஓதினார். பலரும் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் ஒலிபெருக்கியில் மெதுவான சத்தத்தில் வயலின் இசை. மனதுக்கு இதமாக ஒலித்தது. எல்லோரும் ரசித்துக் கொண்டே உணவையும் ருசித்து அருந்தினர்.

மிகமிக பாராட்டத்தக்க விடயம் இது. புதுமனையிலே இவ்வாறான ஒலியே ஒலிக்க வேண்டும். அநேகமான வீடுகளில் புதுமனை புகும் நாளிலும் பெரிதான 'தொம் தொம்' என்று நெஞ்சை அதிரவைக்கும் குத்திசையை ஒலிக்கச் செய்கிறார்கள். புதுமனை புகும்விழாவிலோ வீடுகளில் நிகழும் ஏனைய விழாக்களிலோ வருகை தருபவர்கள் மனமகிழ்ச்சியோடு இருந்தாலே அது மனதார வாழ்த்துவதாக அமையும். நெஞ்சை உலுக்கும் சத்தத்தை கேட்பவர்கள் எவ்வளவு விரைவாக சாப்பிட்டபின் வெளியேறுவோம் என்று மனதுள் சினத்துடன் அங்கலாய்த்துக் கொண்டிருப்பார்கள். இது எதிர்மறையை அந்த வீட்டில் உண்டாக்கிவிடும்.

திருமுறை நூலை மங்கலப் பொருளாக மனையில் வைத்துப் புதுமனைப் புகும் நாளன்று திருமுறை ஓதுவதும் மனதுக்கு இதமான பாடல்களையோ இசையையோ அளவான சத்தத்துடன் ஒலிக்கச் செய்வதும் நல்ல விடயத்தை நடைமுறையை எல்லோரும் கைக்கொள்ள வேண்டுகின்றேன்.

-க.இராசநாயகம்.

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# பொலிஸார் என கூறிய இருவர் பேருந்துச் சாரதி மீது தாக்குதல்

## மக்கள் விசனம்

*சாவகச்சேரி, டிசெ. 5*
*பொலிஸார் என்று தம்மை அடையாளப்படுத்திய இருவர் சேவையில் ஈடுபட்டிருந்த பேருந்து ஒன்றின் சாரதியைக் கடுமையாகத் தாக்கினர்.*

அவரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். சாரதியைத் தாக்கும் போது அதைத் தடுத்த பொதுமக்களில் சிலரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கனகன்புளியடி, நுணாவில் வீதி மட்டுவில் அரசடி சந்தியில் இடம் பெற்றது. அந்த பேருந்து சேவையில் ஈடுபட்டிருந்தபோது, வீதியில் நின்றிருந்த தம் மீது சேறு அடிபட்டது என்று தெரிவித்தே சாரதி தாக்கப்பட்டார் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

சாரதி தாக்குதலுக்கு உள்ளாகும் போது அங்கு நின்றிருந்த பயணிகள் தாக்கவிடாமல் தடுத்திருந்தனர். இதனால் தடுத்தவர்களில் சிலரும் அவர்களால் முச்சக்கர வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டுப் பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உந்துருளியில் வந்த குறித்த இருவரும் மதுபோதையில் நின்றனர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தாக்கியவர்கள் பொலிஸார் எனின் சாரதி குற்றம் செய்திருந்தால் அவரை நீதிமன்றில் முற்படுத்தியிருக்க வேண்டும். பொது இடத்தில் தாக்குவது சட்டத்துக்குப் புறம்பானது என்றும் மக்கள் தெரிவித்தனர். (ஐ- 9)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.5
இராசையா ஸ்ரீதரன் எழுதிய 'சிறுவர் கதைக் கொத்து' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம், நாவலர் வீதி ஈழத்து சீரடி சாயி மந்திரில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் முதற்பிரதியை ஆனைப்பந்தி நாவலர் கல்வி நிலைய இயக்குநர் சி.குணாளன் பெற்றுக் கொள்வார். (க)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.5
இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு முழு நேர தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

2020 ஆம் ஆண்டில் புதிய கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்குழாய் பொருத்துநர் தேசியதொழில்தகைமை மட்டம் 4 (NVQ4) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 155ஆம் கட்டை, ஏ-9 வீதி, கிளிநொச்சி அல்லது தொ. இல. 021 228 5686 இலக்கத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஆசிரிய இடமாற்ற சிக்கல்கள் ஆராய்வு

## ஆசிரிய சேவைச் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5
வடக்கு மாகாண ஆசிரியர்கள் வலய ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் இடமாற்றத்தில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாருடன் இது பற்றி கடந்த திங்கட்கிழமை ஆராயப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்க உப செயலர் புயல்நேசன் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட அழகியல் பாட ஆசிரியர்கள் தொடர்பாக, அந்த ஆசிரியர்கள் அனைவரும் ஏழு வருடங்களுக்கு மேலாக வெளி மாவட்டங்களில் கஷ்ட, அதிகஷ்ட பகுதிகளில் தொடர்ச்சியாகக் கடமையாற்றுகின்றனர். உளரீதியாகப் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். கற்றல் , கற்பித்தல் செயற்பாடுகளில் நேர்த்தியாக ஈடுபட முடியாமல் உள்ளனர். என்று மாகாணப் பணிப்பாளரிடம் தெரிவிக்கப்பட்டது. பெண் ஆசிரியர்கள் பல வருடங்கள் வெளிமாவட்டங்களில் தொடர்ச்சியாக கடமையாற்றுகின்றனர். குழந்தைச் செல்வத்துக்கான சிகிச்சை, சிசுகளுக்கான சிகிச்சை முதலியவற்றைச் சரியாக பெற முடியாமல் பரிதவிக்கின்றனர். பெண் ஆசிரியர்கள் சிலர் பல ஆண்டுகள் நீண்ட தூரம் பேருந்தில் பயணிப்பதால், கருச்சிதைவுக்கும் ஆளாகின்றனர். சில பெண் ஆசிரியர்களின் திருமணங்கள்கூட தடைப்பட்டுள்ளன. இவ்வாறான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்துமாறு, எமது சங்கம் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். ஆசிரியர்கள் தொடர்பாக அக்கறை எடுப்பதாகவும் சேவைக்காலம் முடியாத ஆசிரியர்களுக்கு அவர்களின் வயது, குடும்பச் சூழல் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு நிரந்தர இடமாற்றமோ, தற்காலிக இடமாற்றமோ வழங்கப்படும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வாக்குறுதியளித்தார் என்று செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)



# பழமைவாய்ந்த ஆலய மடம் மழையால் இடிந்து வீழ்ந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.5
கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த பழமை வாய்ந்த மடம் மழை காரணமாக இடிந்து வீழ்ந்தது. நேற்றுமுன்தினம் இரவு பெய்த கனமழையின் காரணமாக மடம் இடிந்து வீழ்ந்துள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த மடமானது பல வருடங்களுக்கு முன்னர் ஆலயத்துக்கு வருபவர்கள், அந்தப் பகுதியில் உள்ளவர்கள் மற்றும் வீதியால் சென்று வருபவர்கள் இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இந்த மடத்தை ஆலய நிர்வாகம் தொடர்ந்து உரிய முறையில் பராமரித்து வந்திருந்த போதும், கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் தொடர்ச்சியான மழையால் மடம் இடிந்து வீழ்ந்துள்ளது. பழமைவாய்ந்த குறித்த மடம் மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்படும் என்று அரசடி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-ரி1,105)

# சூரிய கிரகண அவதானிப்பு முகாம்களை அமைக்கத்திட்டம்

## மாணவர்களுக்குப் பரீட்சை 13இல்

யாழ்ப்பாணம்,டிசெ.5
வடக்கில் சூரியகிரகணத்தை அவதானிக்கும் அரியவாய்ப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி கிடைக்கும். அதனை முன்னிட்டு சூரியகிரகண அவதானிப்பு முகாம்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக் கழகம், மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகம், விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும், சூரிய கிரகண அவதானிப்பு முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

இதில் மாணவர்களுக்கு வானியல் தொடர்பான விரிவுரைகளை நடத்தவும், கிரகணத்தின் போது விஞ்ஞான ஆய்வுக்குத் தேவையான அளவீடுகளை மேற்கொள்ளவும் அமெரிக்காவிலிருந்து ஆய்வுக்குழுவினர் வருகை தருவதற்குரிய ஒழுங்குகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களையும், நிதியுதவியையும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு வழங்குகின்றது. இதனுடன் இணைந்து நோர்வே தூதரகமும் அனுசரணை வழங்குகின்றது.

சூரியகிரகணம் தொடர்பான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி அன்று நடத்த ஒழுங்கமைப்புக் குழுவினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தரம் 8 தொடக்கம் 11 வரையான பாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சைகள் நடைபெறும். இந்தத் தேர்வுக்கு முன்னர், சூரியகிரகணத்தைப் பற்றியும் அதனைப் பாதுகாப்பான முறையில் அவதானிப்பது பற்றியும், விளக்கவுரையுடன் கூடிய காணொலி பரீட்சை மண்டபங்களில் காண்பிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பதிவுக்கு http://event.jfn.ac.lk/eclipse/ என்ற இணைய முகவரியைப் பார்வையிட்லாம். விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி உங்கள் பிரதேச செயலகங்களில் அவற்றை ஒப்படைப்பதன் மூலமும் பரீட்சைக்குப் பதிவு செய்யலாம். எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். சூரியகிரகணம் குறித்த விவரணக் காட்சியும், பரீட்சையும் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும்.

பரீட்சை மண்டபம், நேரம் மற்றும் சூரியகிரகணம் தொடர்பான ஏனைய விவரங்களை http://event.jfn.ac.lk/eclipse/ என்ற இணைய முகவரியில் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# அதாவுல்லாவின் பேச்சுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.5
மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா வெளியிட்டுள்ள கருத்துக்கு. இலங்கை ஐக்கிய மக்கள் நற்பணிமன்றக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

அதாவுல்லா மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் தனியார் தொலைக் காட்சி ஒன்றில் நடத்தப்பட்ட நிகழ்வில் பேசியுள்ளார். அவரது கருத்துக்கு எமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மலையக மக்கள் எமது தமிழ்ச் சகோதரர்கள், இலங்கையர்கள்.

மலையக மக்களை நாம் மதித்து அவர்களின் முன்னேற்றத்துக்கு எமது கட்சி எல்லா வகையிலும் உதவும் என்றும் கட்சி சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மண்வளத்தை இழப்போமானால் உணவுக்குக் கையேந்த நேரிடும்

## விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 5

எங்கள் பிரதேசத்தின் வளமான மண்ணை இழப்போமானால், விவசாய முயற்சிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும். இதனால், நாம் உணவுத் தேவைக்காகப் பிறநாடுகளில் முழுமையாகத் தங்கி நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்துள்ளார். உலக மண் தினத்தை முன்னிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மண் வளத்தைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 2002 ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி உலக மண் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. மனித குலத்துக்கும் ஏனைய உயிரினங்களின் வாழ்வுக்கும் இன்றியமையாத மண்ணைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

“மண்ணரிப்பை நிறுத்துங்கள், எதிர்காலத்தைக் காப்பாற்றுங்கள்” என்ற தொனிப்பொருளுடன் இந்த வருடம் மண் தினம் கொண்டாடப்படுகிறது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், அதுவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில், போரின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக, பயிர்ச்செய்கை நிலப்பரப்புக்கள் உட்கட்டுமானத் தேவைகளுக்காகக் கூடியளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், பயிர்ச் செய்கைத் தேவைக்கான நிலப்பரப்பு வெகு வேகமாகக் குறைவடையத் தொடங்கியுள்ளது.

பயன்தரு மரங்களின் அழிப்பின் காரணமாக, பிரதேசத்தின் மண் வளம் பாதிப்படைவதுடன், சூழலியல் தொடர்பான பல பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம்.

மரங்கள் அழிக்கப்படும் நிலையில் மண் வளம் பாதிப்படைவது மட்டுமல்லாது, நிலத்தடி நீர் வளமும் வெகுவாகப் பாதிப்படையும். இந்த நிலமையைக் கருத்தில் கொண்டு வடமாகாண விவசாயத் திணைக்களம் பயன்தரு மரக்கன்றுகளை நாற்று உற்பத்திப் பண்ணைகளில் பெருமளவில் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்துமுன்னெடுத்துவருகின்றது.

எமது விவசாயிகள் அளவுக்கதிகமாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இது மண் வளத்தைப் வெகுவாகப் பாதிக்கும். விவசாயிகள் இயன்றவரையில் இயற்கைப் பசளைகளைப் பாவிப்பதுடன், தமது பயிர்ச்செய்கை நிலத்தை கிரமமான முறையில் மண் பரிசோதனைக்குட்படுத்தி, சிபார்சுக்கமைவாக உரங்களைப் பாவிப்பதன் மூலம், தமது உற்பத்திச் செலவைக் குறைப்பதோடு மட்டுமல்லாது, மண் வளத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தற்போது யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில், திண்மக்கழிவுகள் முறையாக முகாமை செய்யப்படுவதில் பல இடர்ப்பாடுகள் காணப்படுகின்றமை, மண் வளத்தை வெகுவாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. வீட்டுக் கழிவுகளைச் சேதனப்பசளையாக நாம் மாற்றிக் கொள்வோமானால், எமது மண் வளத்தைக் கூட்டி வீட்டுக்கு ஒரு வீட்டுத்தோட்டத்தையும் அமைத்துக் கொள்ள முடியும்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய முதன்மையான துறையாக விவசாயம் அமைவதால், எமது விவசாய நிலங்களின் வளத்தைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும். - என்றுள்ளது. (க)

# ஆறு மாதங்களைக் கடந்தும் மணல் கிடைக்கவேயில்லை

## விண்ணப்பித்த பலரும் குற்றச்சாட்டு

கொடிகாமம், டிசெ. 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் மணல் பெறுவதற்கு விண்ணப்பித்த தனியாருக்குக் கடந்த 6 மாதங்களாக மணல் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாகவே முன்வைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:

‘வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு மணல் வழங்கப்படும் அதேவேளை மணலுக்கு விண்ணப் பித்து ஆறு மாதங்களாகியும் எமக்கான மணல் விநியோகம் நிறுத்தப் பட்டுள்ளது.

கட்டடங்களைக் கட்டுவதற்கு மணல் கோரி, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் விண்ணப்பித்திருந்தோம், எமக்கான மணல் விநியோகம் கடந்த ஆறு மாதங்களாக இடம்பெறவில்லை. மழைக்கு முன்னர் கட்டடங்களைக் கட்டி முடிக்க எதிர்பார்த்திருந்தோம். ஆனாலும் தற்போது மழையும் வந்துவிட்டது. ஆனால் மணல் இதுவரை வழங்கப்படவில்லை.

மாறாக வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு மணல் விநியோகிக்கப்படுகிறது. ஏன் எதற்காக எமக்கு விநியோகிக்கப்படவில்லை. மணலுக்கான இலக்கமும் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலர் யாழ்ப்பாண மேலதிக செயலராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அதன் பின்னர் இன்றுவரை எமக்கு மணல் விநியோகிக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க. கனகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

“மணல் பற்றாக்குறை இருப்பதால் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், 8ஆயிரம் இலக்கங்களுக்கு உட்பட்டவர்களுக்கும் தற்போது கட்டம் கட்டமாக மணல் வழங்கப்படுகிறது. மணலுக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் மணல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று அவர் தெரிவித்தார். (ஐ-159)

# ஆனந்த அனுபவ பயிற்சிகள்

வாழும்கலை அமைப்பின், ஸ்தாபகர் ரவிசங்கர்குருஜியுடன் இணைய நேரடி ஒளிபரப்பினூடாக உலகில் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் ஆனந்த அனுபவப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் மாலை 5.30 மணிமுதல் 9.00 மணிவரை நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள திவ்ய ஜீவன சங்கத்தில் பயிற்சிகள் நடைபெறும்.

இதற்கான பதிவுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 முதல் 5.15 மணிவரை இடம்பெறும். மேலதிக தகவல்களுக்கு 0772247635 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



# வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக இணையத்தளம் அறிமுகம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகமானது தனக்கான இணயத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை சுற்றுலாப் பணியகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதன்மைச் செயலர் அ. பத்திநாதன் கலந்துகொண்டு இணையத் தளத்தை ஆரம்பித்துவைத்தார்.

இதன் மூலம் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள சுற்றுலா மையங்களையும் அவற்றைச் சென்றடையக் கூடிய வழிகளையும் இலகுவில் தெரிந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கட்டைக்காடு பகுதியில் வீடுகளுக்குள் வெள்ளம்

## அவர்கள் தற்காலிகமாக பாடசாலையில்

அதிக மழை காரணமாக கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் மக்களின் வீடுகளுக்குள் நேற்றுமுன்தினம் வெள்ளம் புகுந்தது. இதனால் இரண்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அந்தக் குடும்பங்கள் கட்டைக்காடு அ.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளன. கண்டாவளைப் பிரதேச செயலாளரின் முயற்சியால் பாதுகாப்பான பகுதிக்கு மக்கள் நகர்த்தப்பட்டனர்.

தொடர்மழை காரணமாக கிளிநொச்சி பெரியகுளம் வான்பாயும் நிலைக்கு வந்துள்ளது. அதிலிருந்து வெளியேறும்வெள்ளமே வீடுகளுக்குள் புகுந்துள்ளது. அங்கு நேற்றுமுன்தினம் சென்ற கண்டாவளைப் பிரதேச செயலர் த. பிருந்தாகரன், பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களையும் அங்கிருந்து வெளியேற்றி கட்டைக்காடு அ.த.க. பாடசாலையில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவர்களுக்கான உணவு, சுகாதாரம் உள்ளிட்ட வசதிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இதேவேளை, குறித்த பகுதியில் வட்டக்கச்சி செல்லம் முதன்மை வீதி ஊடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

பிரமந்தனாறு குளம் அடைவு மட்டத்தை அடைந்து மேலதிக நீர் வெளியேறி வருவதால், அந்தப் பகுதி மக்களின் பயன்பாட்டு வீதி ஊடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் வாழும் 15 குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-6)

# கட்டாக்காலி நாய்களால் வலி.கிழக்கில் சிரமங்கள்

வலி. கிழக்கில் கட்டாக்காலியாக நடமாடும் நாய்களால் வீதியில் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளில் கூடுதலாகக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் நடமாடி வருகின்றன. பருத்தித்துறை வீதியிலும் அதிகளவில் கட்டாக்காலி நாய்கள் நடமாடுகின்றன. இதனால் பயணிகள் சிரமப்படுகின்றனர். விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கோப்பாயில் அண்மையில் உந்துருளியில் பயணித்தவர், நாய் குறுக்கே ஓடியதால் உந்துருளியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருந்தார். இத்தகைய விபத்துக்குள் பருத்தித்துறை வீதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றன. கட்டாக்காலியாகத் திரியும் இந்த நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு வலி. கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டாக்காலி நாய்கள் சில சபைகளால் ஆங்காங்கே எப்போதாவது ஒருதடவை பிடிக்கப்படுகின்றன. (து-17)



சாவகச்சேரி மருத்துவமனையின்

## வெளிநோயாளர் பிரிவில் 12,680 பேருக்குச் சிகிச்சை

சாவகச்சேரி, டிசெ. 5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் கடந்த மாதத்தில் மட்டும் 12 ஆயிரத்து 680 பேரும் விடுதிகளில் ஆயிரத்து 729 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதங்களில் பெய்த மழையையடுத்து தென்மராட்சிப் பிரதேச மக்களுடன் பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெற வருகை தந்திருந்தனர். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் குருதி மாதிரிகள் பரிசோதனைக்காகவே இங்கு வந்திருந்தோம் என்று தெரிவித்திருந்தனர்.

விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றவர்களில் 146 பேர் டெங்கு நோயாளர்களாகவுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மாதாந்தம் 8 ஆயிரம் வரையான வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். 500 தொடக்கம் 800 வரையான நோயாளர்கள் விடுதியில் சிகிச்சை பெற்றுள்ளனர். என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (கு-9)

இரணைமடு குளத்துக்கு அண்மித்த

# மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.5

கிளிநொச்சி–இரணைமடுக் குளத்துக்கு அண்மித்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்டச் செயலரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளது. எனினும் தனக்கு அவ்வாறான கடிதங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக் குளத்துக்கு அண்மித்த பகுதியில் இரவு பகலாக பல டிப்பர்களில் எந்தவித அனுமதியும் இன்றி அதிக மணல் சூறையாடப்படுகின்றது.

டிப்பர்கள் பகிரங்கமாகவே இந்த மணல் கொள்ளையில் ஈடுபடுகின்றன. ஒரு அரசியல் வாதியின் செல்வாக்குடன் 5 டிப்பர்களை வைத்து மணல் கொள்ளை இடம்பெறுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

"மணல்கொள்ளை இடம்பெறுவது தொடர்பில் எமது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. அதன் பிரகாரம் நாமும் அவதானித்த நிலையில், கொள்ளை இடம்பெறுவதும் உண்மையாகவே உள்ளது. இருப்பினும் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எம்மிடம் கிடையாது.

இதன் காரணமாகவே மாவட்டச் செயலருக்கு எழுத்து மூலம் முறையிடப்பட்டதென்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் பதிலளித்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறிப்பிட்ட பகுதியில் அடாத்தாக மணல் அள்ளப்படுவதாக முன்னர் ஒருமுறை எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு அதன் பிரகாரம் உடனடியாகவே நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

இருப்பினும் தற்போது 7 மாதங்களாக எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை. நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கே சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உண்டு. அவ்வாறு சட்ட நடவடிக்கையை எடுக்க முடியாது விட்டால் உடன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. - என்றார். (க-105)

## 6 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ். மாநகர பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது ஆறு குடியிருப்புக்களில் நுளம்பு குடம்பிகள் இனம் காணப்பட்டன. நுளம்பு குடம்பிகள் காணப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். யாழ். நகரில் ஜே. 81 கிராம அலுவலர் பிரிவிலும், வண்ணார்பண்ணையில் ஜே.104 கிராம அலுவலர் பிரிவிலும், நாவாந்துறையில் ஜே 87 கிராம அலுவலர் பிரிவிலும் நுளம்புக் கட்டுப்பாட்டுச் சோதனை நடவடிக்கைகள் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 929 வரையிலான குடியிருப்புச் சுற்றாடல்கள் பரிசீக்கப்பட்டன.

ஆறு குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. இந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

## பெற்றோரின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே ஒழுக்கமுடைய பிள்ளைகளை உருவாக்கலாம்

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



கொடிகாமம், டிசெ. 5

சமூகத்தில் பிள்ளைகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர வேண்டுமாக இருந்தால், அவர்களுக்கு பெற்றோர்களின் பங்களிப்பு கட்டாயம் தேவை. புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சைகளின் போது மட்டுமல்லாது உயர்தரப் பரீட்சைகளிலும் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இருக்கவேண்டும் இவ்வாறு தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

நாவற்காடு வரணி கரம்பை அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

தனியாக ஓர்அதிபரால் ஒரு பாடசாலையை வளர்த்துக் கொள்ள முடியாது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 58 பாடசாலைகள் உள்ளன. 13 பாடசாலைகள் 50 பிள்ளைகளுக்கு குறைவாக இருக்கின்றன. மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் நகர்ப்புற பாடசாலையின் ஒரு வகுப்பறைதான் இந்த பாடசாலை. ஒரு வகுப்பறை கொண்ட பாடசாலையாக இருந்தாலும் சாதனை படைக்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். வடக்கு மாகாணத்தில் 12 வலயங்களிலும் 70 புள்ளிக்கு மேல் சித்தி பெற்றதால் தென்மராட்சிக்கல்விவலயம் முதலிடத்தைப்பெற்றுள்ளது. உயர்தரப் பரீட்சைக்குச் செல்லும் போது அம்மாவும் அப்பாவும் தேவை. மாணவர்களின் அன்புத் தேவையை நிறைவேற்ற அம்மா அப்பா உறவினர்களின் அரவணைப்பு இல்லை என்றால் தவறான வழிக்குத்தான் பிள்ளை செல்லும். புலமைப் பரிசில் பரீட்சைக்கு உள்ள ஆதரவு சாதாரண, உயர்தரப் பரீட்சைகளுக்கும், தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற வேண்டும் என்றால் பெற்றோர்கள் பங்களிப்பு வேண்டும். பிள்ளைகளை உரிய நேரத்தில் விளையாட விடுங்கள். நீங்கள் வளர்ந்து வர வேண்டும் சமூகத்திலே மற்றவர்கள் மதிக்கக்கூடிய வகையில் வாழ வேண்டுமாக இருந்தால் அதற்கு தேவை கல்வி தான் ஒரேயொரு ஆயுதம். நல்ல குடிமகனாக இருக்க வேண்டும் என்றால் நல்ல குணங் களோடு வாழ வேண்டும். பட்டம், பதவி, வசதி வாய்ப்பு இருந்தாலும் நற்பண்பு இல்லை யென்றால் அதனால் ஒரு பயனும் இல்லை. சமூகத்துக்கு பொருத்த மற்றவராக இருந்தால் சமூகம் ஏற்காது. எனவே நல்ல நற்பண்புள்ளவர்களாக வாழ வேண்டும். -என்றார். (ஐ-159)

## விபத்தில் இருவர் காயம்

நடந்து சென்றவர்களை உந்துருளி மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து உரும்பிராயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் மானிப்பாய் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த தாயும், அவருடைய 6 வயது மகனும் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, வேகமாக வந்த உந்துருளி மோதியது. அதில் தாயும் அவருடைய 6 வயது மகனும் படுகாயமடைந்தனர். காயமடைந்த இருவரும் அங்கிருந்த பொதுமக்களால் நோயாளி காவு வண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-104)

## வெள்ள வாய்க்கால் துப்புரவு

கொழும்புத்துறை, டிசெ. 5

கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் முதன்மை வெள்ள வாய்க்கால் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தின் ஊடாக வந்துசேரும் கழிவுகள் வாய்க்கால்களில் நிரம்பி காணப்படுகின்றமையால் வெள்ளம் வழிந்தோட முடியாது தடைப்பட்டு காணப்பட்டது. இதனையடுத்து வெள்ளம் வாய்க்கால் ஊடாக வழிந்தோடக் கூடிய வகையில் துப்புரவு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். (ஐ-17)

## கருங்குளவி தாக்கி 3 மாணவர்கள் மருத்துவமனையில்

பனை ஓலைக்குள்ளிருந்த கருங்குளவிகள் தாக்கியதில் 3 மாணவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வரணி கரம்பைக்குறிச்சி பகுதியில் இடம்பெற்றது. (ஐ-9)



## வினாடி வினா போட்டிகள்

வவுனியா.டிசெ.5
சிறப்புத்தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகர்களிடையே பொது அறிவு வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டன.
போட்டியின் அரை இறுதிப்போட்டிகள் நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகத்தில் மாவட்ட சமூகசேவை அலுவலகர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றன.
நடுவர்களாக வவுனியா மகாவித்தியாலய ஆசிரியர்கள் ரமேஸ், செல்வி பிறிஸ்கா, அபிவிருத்தி அலுவலகர் ஜனார்த்தனி ஆகியோர் கடமையாற்றினர்.
போட்டியில் 14 அணிகள் பங்கு பற்றின.
இதில் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும், வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவமனைப் பணிமனையும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின. மூன்றாம் இடத்தை செட்டிகுள பிரதேச செயலகமும், நான்காம் இடத்தை வவுனியா நகர பிரதேச செயலகமும் பெற்றுக் கொண்டன.
இறுதிப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யானைகளின் அட்டகாசம் செட்டிகுளத்தில் அதிகரிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, டிசெ. 5
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்றும், இதனால் தாம் அசௌகரியங்களைச் சந்தித்து வருகிறார்கள் என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



கிறிஸ்தவகுளம், கப்பாச்சி, இரண்டாம் பண்ணை, அரசடிகுளம், பாவக்குளம் ஒன்பதாம் யூனிட் பெரியபுளியாலங்குளம், பயறிக்குளம், ஒட்டாரகுளம், நீலியாமோட்டை போன்ற பகுதிகளிலேயே யானைகளின் நடமாட்டம் மிகவும் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அந்த மக்கள் தெரிவித்ததாவது;
கடந்த இரு தினங்களுக்கு முன்பாக எமது காணிக்குள் புகுந்த யானைகள் சுமார் 60 ஏக்கர் வரையிலான உழுந்துப் பயிர்ச்செய்கையை அழித்து நாசமாக்கியுள்ளன..பல ஏக்கர் நெல் பயிர்களையும் அழித்துள்ளன. இவ்வாறு விவசாய நிலங்களில் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளால், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அழிவின் விளிம்பில் நாம் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. யானைகளால் ஏற்படும் அழிவுகள் தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அக்கறையற்று இருக்கின்றனர். இதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை விரைவில் எடுக்க வேண்டும் என்றனர்.
மக்களுடைய குற்றச்சாட்டு தொடர்பாக செட்டிகுளம் பிரதேச கமநல அபிவிருத்தி அலுவலகர் ந. விமலேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;
"விவசாயிகள் தமது பயிர்செய்கைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தால் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடமும் இவ்வாறான பாதிப்புக்குள்ளாகிய விவசாயிகளுக்கு நாம் காப்புறுதியை பெற்றுக் கொடுத்திருந்தோம் - என்றார். (ஐ-110)

## மாணவரிடையே போட்டிகள்

கொழும்புத்துறை, டிசெ.5
'ஆரோக்கியமான யாழ்ப்பாண நகரத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்' என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்பநல மருத்துவப் பிரிவினின் ஏற்பாட்டில் இந்தப் போட்டிகள் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.
போட்டிகள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பன்னாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9 மணிக்கு பேச்சுப் போட்டியும், 14ஆம் திகதி காலை 9 மணிக்கு ஓவியப் போட்டியும், அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு கட்டுரைப் போட்டியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு தலைப்புக்களில் நடைபெறும் இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை 6 ஆம் திகதியாகும். பங்குபெற விரும்பும் மாணவர்கள் 0779073773 என்னும் தொலைபேசி இலக்கத்திலும், தொலைநகல் 021222 2073 இலக்கத்திலும் தொடர்பு கொண்டு விண்ணப்ப விவரங்களைப் பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-135)

### கொடிகாமம் வாசிக்கு ரூ.ஒரு லட்சம் தண்டம்

கசிப்பை உடைமையில் வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (க-9)

## வெள்ள இடரை எதிர்கொள்ள தயாராகவே இருக்கிறோம்

### வவுனியா மாவட்ட செயலர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 5
வவுனியாவில் இடர் ஏற்படும் பட்சத்தில் பிரதேச செயலர் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவினூடாக உடன் நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளோம் என்று வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா தெரிவித்தார்.
வெங்கலசெட்டிகுளம் பகுதி ஆண்டியா புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உடையார்கட்டுகுளம் உடைப்பெடுத்ததால், 15 ஏக்கர் காணி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.
தொடர்ந்தும் மழைபெய்து வவுனியா மாவட்டத்தில் ஏதாவதொரு பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படுமாக இருந்தால் அந்தப் பகுதிக்குரிய பிரதேச செயலூடாக இடர் முகாமைத்துவத் திணைக்களத்தின் உதவியுடன் உடனடி நிவாரண வேலைத்திட்டத்தை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. - என்று மேலும் தெரிவித்தார். (த-110)

## சாவகச்சேரியில் சிறப்பு தேவையுடையோர் தினவிழா இன்று

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் பிரதேச சிறப்புத் தேவையுடையோர் தின விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜிதா சுனில் ஆரியரத்ன, சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.முரளிகரன், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச விவாகப் பதிவாளர் க.மோகனராஜலிங்கம், கொடிகாமம் வணிகர் மன்றத்தின் தலைவர் சி. அருணாசலம் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் பிரதேச மாற்றுத் திறனாளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (க-9)

# சீரற்ற காலநிலையால் பல குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா.டிசெ.5
வவுனியாவில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்துவரும் அடை மழை காரணமாக, பின்தங்கிய கிராமங்களிலுள்ள தொழிலாளர்கள், தொழிலின்றி வறுமை நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
அன்றாட தொழிலுக்குச் செல்பவர்கள், தொழிலின்றி தமது குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஈடு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.
வவுனியா சிதம்பரபுரத்தில் 4 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சில குளங்களில் நீர் மட்டம் அதிகரித்துக் காணப்படுவதுடன், தாழ் நிலங்கள், வீதிகள் சிலவற்றில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறு சீரற்ற காலநிலை நீடிக்குமானால்மேலும் பலகுடும்பங்கள் பாதிப்படையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாதிப்பை எதிர்கொண்டுள்ள குடும்பங்களுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உதவிகளை வழங்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# யாழ். வர்த்தக சந்தை ஜன. 24இல் ஆரம்பம்

## வியப்பூட்டும் பல காட்சிக்கூடங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.5


யாழ்ப்பாணம் பன்னாட்டு வர்த்தக சந்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சி ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வரை இடம்பெறும். யாழ். வர்த்தக மற்றும் கைத் தொழில் சம்மேளனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சி 11 ஆவது முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. கண்காட்சியை 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிடுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே. விக்னேஸ்வரன் தெரிவித்தார். வர்த்தக சந்தை தொடர்பாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

வடக்குக்கான உங்களது நுழைவாயிலாக இந்தக் கண்காட்சி அமையும். கண்காட்சியில் பங்கு கொள்வதற்கு பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. தென் இந்தியாவின் முக்கிய வர்த்தக நிறுவனங்கள் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்புகளை வைத்துள்ளனர்.

11 வருடங்களுக்கு முன்னர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகக் கண்காட்சியின் மூலம், வடக்குப் பிரதேசம் பெருமளவில் அபிவிருத்தி அடைந்துள்ளது. சிறப்பான மத்திய தரத் தொழில் முயற்சிகள் வெகுவாக வளர்ச்சி கண்டு வருகின்றன. இந்திய அரசால் வழங்கப்பட்ட 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியின் மூலம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் தொழில்துறைகள் வளர்ச்சி கண்டுள்ளன.

மாநகர சபை, பன்னாட்டு வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகம் ஆகியன இதற்கு ஆதரவு அளிக்கின்றன. 2010 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் இடம்பெறுகின்ற ஒரு நிகழ்வாக மாறியுள்ள கண்காட்சி, வர்த்தக சந்தை, விற்பனைக் கண்காட்சிக்கூடங்கள், மாலைப்பொழுது நேரடி இசை நிகழ்வுகள், மோட்டார் சைக்கிள் சாகசக் கண்காட்சி, வியப்பூட்டும் பரிசுகளுடன் ஒவ்வொரு மணித்தியாலமும் அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டிழுப்புக்கள். சிறுவர்களுக்கான விளையாட்டு ஏற்பாடுகளுடன் பொழுதுபோக்கு பூங்கா, பல்வேறு வகையான உணவுகள் அடங்கிய உணவுக் கூடம் மற்றும் பல்வேறுபட்ட கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. விவசாயம், விருந்தோம்பல், கல்வி, நவநாகரிகம் மற்றும் உணவு தொழில்துறைகள் அடங்கிய பல்வேறுபட்ட வர்த்தக துறைகளைக் கொண்ட நிகழ்வு என இது பெயர் பெற்றுள்ளதுடன், கிட்டத்தட்ட வடக்கில் உள்ள ஹோட்டல்கள் அனைத்துமே நிகழ்வுக்கு வருகை தருகின்றவர்கள் தங்க வுள்ளமை காரணமாக நிரம்பி வழிவதுடன் போக்குவரத்து மற்றும் ஏனைய ஏற்பாட்டு வசதிகள் போன்ற ஏனைய சேவைகளும் இந்தக் காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சி காணும்- என்றார். (க-7)



# இரண்டு புகையூட்டல் கருவிகள் கையளிப்பு

தென்மராட்சி, டிசெ.5

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபையால், டெங்கு நுளம்பின் பரம்பலைக் கட்டுப்படுத்தும் இரு புகையூட்டல் கருவிகள், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குக் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகம் காணப்படுவதால் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால், டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்குப் பிரதேச சபை வழங்கும் ஒத்துழைப்புடன் நுளம்புப் பரம்பலைக் கட்டுப்படுத்த புதிய நவீன புகையூட்டல் கருவியைக் கொள்வனவு செய்து வழங்கவேண்டும் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

அதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை பணியகத்தில் கருவிகளை ஒப்படைத்தனர். நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினரால் நீண்ட காலத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட புகையூட்டல் கருவிகளே சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

பணியகத்தினர் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் புகையூட்டல் நடவடிக்கைக்கு உள்ளூராட்சிச் சபைகள் எரிபொருளையும் வழங்கி வருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும், தமது பிரிவு சுகாதார மருத்துவ பணியகத்துக்கு தலா ஒரு புகையூட்டல் கருவியை வழங்கியுள்ளது. இதன் மூலம் மாவட்டத்தில் டெங்கின் தாக்கத்தை ஓரளவு குறைக்க முடியும் எனக் கருதப்படுகிறது.

வடமராட்சித் தெற்கு, மேற்கு பிரதேச சபை போன்று மாவட்டத்தில் உள்ள மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள் முன்வந்து தமது பிரிவு மக்களின் நலன் கருதி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குப் புகையூட்டல் கருவிகளை வழங்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் ஏனைய நிர்வாக அலகுகளுடன் ஒப்பிடுகையில் தென்மராட்சிப் பிரதேச நிலப்பரப்பில் மக்கள் தொகை ஏறக்குறைய இரண்டு மடங்காக உள்ளது. பல அரச நிறுவனங்கள் ஒரு நிர்வாக அலகுக்கென ஒதுக்கப்படும் உள்ளீடுகளுடனேயே மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளன. இதற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்கள் விதி விலக்கல்ல.

மக்களுக்குச் சேவைகளை வழங்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் வடமராட்சித் தெற்கு மேற்கு பிரதேச சபையை முன்னுதாரணமாகக் கொண்டு மாவட்டத்தில் பெருகிவரும் டெங்கு அதிகரிப்பைக் கட்டுப்படுத்த இவ்வாறான கருவிகளைக் கொள்வனவு செய்து வழங்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

## வடமராட்சியில் புகையிலை நடுகை ஆரம்பம்

வடமராட்சி, டிசெ.5

கடந்த சில நாள்களாக மழை பெய்து ஓய்ந்ததைத் தொடர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நடுகை செய்யும் பணியை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நலன்கருதி பொலிகண்டி, மந்திகை, புலோலி ஆகிய இடங்களில் பெருமளவிலான புகையிலைநாற்றுமேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. (ஐ-173)

## சிறப்புத் தேவையுடையோர் பயனடைந்த தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், டிசெ.5

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறப்பு தேவையுடையவர்களுக்கு, தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கிலான தொழில் சந்தை, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பன்னாட்டு தொழில் சார் நிறுவனமான ஐ.எல்.ஓ மற்றும் மாகாண சமூகசேவைகள் திணைக்களம் இணைந்து சிறப்புத் தேவையுடையோருக்கான தொழில் சந்தையை நடத்தியது. சிறப்பு தேவையுடைவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, அவர்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல் மற்றும் தொழிற்சாலைகளில் பொருத்தமான வேலைகளுக்கு உள்வாங்கல் போன்ற வேலைத்திட்டங்கள் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

பல்வேறு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் சுமார் 19 நிறுவனங்கள் இதற்கான தேர்வுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கின. இதில் 200க்கும் அதிகமான சிறப்பு தேவையுடையோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். (க-7)

## ஈருருளி திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.5

வீட்டு வளவுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈருருளி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் உரும்பிராயில் நடந்துள்ளது.

உரும்பிராய் சிவன் வீதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் பல ஈருருளிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றமை வழமை. வேலை மற்றும் வகுப்புகளுக்காகவும் யாழ்ப்பாணத்துக்குப் பேருந்தில் செல்வதற்காகப் பலர் இந்த வளவினுள் ஈருருளிகளை நிறுத்திவிட்டு செல்வதுண்டு. இது அவதானிக்கப்பட்டுத் திருடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த இடத்தில் மாதாந்தம் இரண்டு ஈருருளிகள் திருடப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகப் பல தடவைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க-104)

# வீதியில் கொட்டப்படும் இறைச்சிக் கழிவுகள்

## பயணிப்போர் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.5

வெளிப்பிரதேசங்களில் கோழி இறைச்சிக் கடைகளை நடத்தும் உரிமையாளர்கள், அதன் சகல கழிவுகளையும் உரப்பைகளில் பொதி செய்து, கோம்பையன் மணல் மயானத்தின் வீதி அருகே வீசும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

அதனால் கோம்பையன்மணல் மயான வீதியெங்கும் கோழிக் கழிவுகள் வகை, தொகையின்றிக் காணப்படுகின்றன.

அவற்றைக் கட்டாக்காலி நாய்கள் பிரித்து அந்த இடத்தை அசுத்தப்படுத்துவதால் மோசமான துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் பொதுமக்கள் சௌகரியமான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது அவதியுறுகின்றனர்.

கோழிகளின் குடல்கள், கால் கழிவுகள் மற்றும் செட்டைகள் உள்ளிட்ட கழிவுகளே இவ்வாறு ஆனைக்கோட்டை வழியாகவும், யாழ்ப்பாணம் ஐந்து சந்தி வழியாகவும் கொண்டு வரப்பட்டு இரவு வேளைகளிலும், அதிகாலைப் பொழுதிலும் கொட்டப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் அங்கு மறைகாணி பொருத்தி, கழிவுகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்த போதும், இதுவரையில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சபாநாயகர் தன்வசப்படுத்தார்

ஹரின் எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, டிசெ. 5

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் கூறப்பட்டாலும், அவரைவிட முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு அந்தப் பதவி வழங்க வேண்டும் என்பதிலேயே பெரும்பாலான உறுப்பினர்கள் மிகத் தீவிரமாகவுள்ளனர். எதிர்க்கட்சி தலைவர் பதவியை தன்வசப்படுத்தும் நோக்கம் சபாநாயகருக்கு கிடையாது என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் குறித்து பல்வேறு தரப்பினரும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்க வேண்டும் என்பது 55இலட்சம் மக்களின் அரசியல் விருப்பாகக் காணப்படுகின்றது. இதற்கு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மதிப்பளிக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளே கட்சியிலும், வெளியிலும் காணப்படுகின்றன. சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வழங்குவதற்கான பெரும்பான்மை ஆதரவு கிடையாது. இந்தப்பதவியைத் தன்வசப்படுத்த அவர் எந்த நிலையிலும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. பெரும்பாலான ஆதரவுக்கு இணங்க தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாட்டில் சபாநாயகர் உறுதியாக உள்ளார். ஆகவே எமது எதிர்பார்ப்புக்கு ஒருபோதும் அவர் தடையாகச் செயற்படமாட்டார். இனவாதத்தையும், மத வாதத்தையும் முன்வைத்தே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. தேசிய நிதி மோசடியாளர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனையா நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள்? - என்றார். (த-61)

## மதம் மாற்ற முயற்சி; உணவகம் முற்றுகை

கொழும்பு,டிசெ.5

உணவகம் ஒன்றில் மதம் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்து, பௌத்த பிக்குகளும், பிரதேச மக்கள் சிலரும் உணவகத்தை முற்றுகையிட்டனர்.

இந்தச் சம்பவம் பல்லெபெத்த, கொஸ்வெட்டிய என்ற பகுதியில் அமைந்துள்ள தனியார் உணவகமொன்றில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான உணவகம் ஒன்றை ஒப்பந்த அடிப்படையில் வேறொருவருக்கு வழங்கியிருந்த உணவக உரிமையாளர் மற்றும் பௌத்த பிக்குகள் பிரதேசவாசிகள் ஒரு சிலர் உணவகத்தை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் மோதல் சம்பவமாக உருவாகும் நிலை ஏற்பட்டதால், அந்த இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். பொலிஸார் சமரசத்தை ஏற்படுத்த முயற்சித்த போதிலும், அவ்விடத்தில் கூடியிருந்த பிரதேசவாசிகள் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் பௌத்த ஆலயம் இருப்பதால், இவ்வாறான விடயம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்று அங்கு கூடிய பிக்குகள், பொதுமக்கள் கடுமையான தொனியில் எச்சரித்தனர்.

குத்தகைக்கு வழங்கிய இடத்தில் இவ்வாறான சம்பவமொன்று நடப்பதை தான் அறிந்திருக்கவில்லை என்று அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்தார். இதனையடுத்து குற்றச்சாட்டு உண்மையானதா? என்பது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்ததையடுத்து அங்கு கூடியிருந்தோர் கலைந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்டமை பொய்

கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு, டிசெ. 5

சுவிஸ் தூதரகத்தின் பெண் ஊழியர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் உண்மையல்ல என்பது இதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்தார்.

மறைகாணி (சிசிரிவி) பதிவுகளை கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் சம்பவ தினத்தன்று பெண் ஊழியர் அலுவலகம் அருகில் வாடகை வாகனத்தில் புறப்பட்டுச் சென்று, பம்பலப்பிட்டியில் நேரத்தைக் கழித்த பின்னர் மாளிகாகந்த பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு வாடகைக் கார் மூலம் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வாடகை கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 'அப்ஸ்' மூலம் அது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சில விவரங்கள் தொழில்நுட்ப ரீதியாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் யாராவது இருந்து செயற்பட்டார்களா? அல்லது தனிப்பட்ட பிரச்சினையா? என்பதை ஊழியரிடம் வாக்கு மூலம் பெற்ற பின்னர் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

சட்டமும் நீதியும் தனது கடமையை செய்யும். நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயரை நீக்கி உண்மையை வெளிக்கொணர எமது அரசு தயங்காது - என்றார். (ஓ.5)

## புலனாய்வுப் பிரிவு, ஆணைக்குழு பழிவாங்கல்களுக்குட்பட்டுள்ளன

புலனாய்வு அதிகாரிகளுக்குப் பொருத்தமற்ற பதவிகள். ஐ.தே.க. எம்.பி. நளின் பண்டார கடும் விசனம்

கொழும்பு, டிசெ. 5



தற்போதைய ஆட்சியில், சுயாதீனப்படுத்தப்பட்ட பொலிஸ் ஆணைக்குழுவினரும் புலனாய்வுப் பிரிவினரும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். பொலிஸாரின் செயற்பாடுகள் முறையற்ற விதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மறுபுறம் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்காகப் பொருத்தமற்ற பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றி பல கேள்விகள் எழுந்துள்ளன. கடந்த அரசில் அரசியல் பழிவாங்கல்களுக்காக இந்த நிறுவனங்கள் பயன்படுத்தப்படவில்லை. மாறாக போலியான குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்துதற்போது மீண்டும் தேவையற்ற பேச்சு மாத்திரம் இடம்பெறுகின்றது. கட்சியின் பெரும்பான்மைத் தரப்பினரின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்தவாரத்துக்குள் தீர்வு எட்டப்படாவிடில், மக்களின் எதிர்பார்ப்புக்கமைய அரசியல் ரீதியில் மாறுபட்ட தீர்மானங்களை எடுப்போம்.

**ஹர்ஷ டி சில்வா**

தவறுகளைத் திருத்திக் கொண்டு சிறந்த அரசியல் செயற்பாடுகளை நகர்த்திச் செல்வதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்க வேண்டும் என்று கோருகின்றோம். இதற்கு கட்சியின் முக்கிய தரப்பினர்கள் இடமளித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஐ.தே.க. மீது போலியான குற்றச்சாட்டுக்கள் அரசியல் தேவைகளுக்காகச் சுமத்தப்பட்டுள்ளன. அதனை கூட்டரசின் ஊடாக நீக்க முடியாமல் போனது. அதற்கு சஜித் பிரேமதாச பொறுப்பல்ல. கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் முறையான மாற்றங்களை முன்னெடுக்காமல் அடுத்தக்கட்ட அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது. தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிடின் கட்சி மேலும் பலவீனமடையும். கட்சிஎதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து தொடர் பேச்சு நடத்த வேண்டும்- என்றார். (த-61)

## இலங்கையருக்கு சுவிற்சர்லாந்து நுழைவிசைவு நிறுத்தம்?

கொழும்பு, டிசெ. 5

இலங்கையர்கள்சுவிற்ஸர்லாந்து செல்வதற்கு நுழைவிசைவு (விசா) வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று சிங்கள ராவய தேசிய அமைப்பின் பொதுச்செயலர் மாலகந்தே சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றிய பெண் அதிகாரி ஒருவர் அண்மையில் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனக்கு சுவிஸ் செல்வதற்கான அழைப்பு ஒன்று கிடைத்தது. அதற்கான ஆவணங்களை சுவிஸ் நுழைவிசைவு நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டது.

அதற்கமைய நான் ஆவணங்களைச் சமர்ப்பிக்கச் சென்றேன். அங்கு இலங்கையர்களுக்கான நுழைவிசைவு வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் என்னிடம் கூறினார்கள் என்றும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-5)



# அரச தலைவர் தேர்தலுக்குப் பின் நாட்டின் சுதந்திரம் பறிபோனது

## ஜனநாயக தேசிய அமைப்பினர் கண்டனம்

கொழும்பு,டிசெ.5

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் நாட்டில் நிலவிய சுதந்திரமான நிலைமைகள் தற்போது இல்லை. தற்போது நடைபெறும் விடயங்களை உற்று நோக்கும் போது சுதந்திரமான நிலமை இல்லாமல் போயுள்ளமையை நிரூபணமாகி உள்ளது என்று தேசிய மக்கள் பேரவை ஏற்பாட்டாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

ஜனநாயக தேசிய அமைப்பினர் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஊடகத்துறை சுதந்திரமாகச் செயற்பட்டது. ஆனால் அரச தலைவர் தேர்தல் நிறைவடைந்து சில நாள்களே ஆன நிலையில் நாட்டில் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஊடகத்துறை சார்ந்தவர்க்ள் இரகசிய பொலிஸார் மூலம் பல மணி நேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரமும், நாட்டின் அபகீர்த்திக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது.

நாட்டில் சுதந்திரத்தைக் கருத்தில் கொண்டு வாக்களித்து, புதிய அரச தலைவரைத் தெரிவு செய்த மக்கள் நாட்டின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் சம்பவங்கள் இடம்பெறுகின்றமையைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

நாட்டின் ஊடகத்துறைக்கு இவ்வாறான அடக்குமுறைகள் பிரயோகிப்பது நாட்டில் சுதந்திர தன்மை இருப்பதை சந்தேகத்துக்குள்ளாக்குகிறது. அரச தலைவரால் வெளியிட்ட அரசிதழ் அறிவித்தலின் பிரகாரம் கடந்த வாரம் பொலிஸாரின் அதிகாரம் இராணுவத்தினருக்கு திடீரென மாற்றப்பட்டிருந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் நாட்டில் இராணுவத்தினரே ஈடுபடுத்தப்படவுள்ளனர். .பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை சுதந்திரமாகச் செயற்பட வழி வகுக்கும் போது தான் நாட்டில் சுதந்திரம் நிலவும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கடந்த அரசுக்குப் பலவேறுபட்ட சவால்கள் காணப்பட்டன. அதனை முன்னாள்அரச தலைவர் மைத்திரி பால மற்றும் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் மற்றும் பாதுகாப்பு செயலர்களே பொறுப்புகூற வேண்டும் எனக் கூறப்பட்டன.

கடந்த அரசின் அபிவிருத்திகள் நாட்டுக்குத் தீங்கானவை என்று தற்போதைய அரசு குறிப்பிடும் போதும், அதன் தொடர்ச்சியையே முன்னெடுத்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைக்கான வவுச்சர் வழங்குவது மாணவர்களுக்கு கஷ்டமான விடயம் என்று நடப்பு அரசில் முன்னதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன வவுச்சர் வழங்கும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எம்.சி.சி ஒப்பந்தங்கள் நாட்டின் தீமைக்கு வழிவகுக்கும் என்று மக்கள் மத்தியில் தகவல்களைப் பரப்பி மக்களை அதற்கு எதிராகத் திசை திருப்பி விட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் மக்களுக்கு அதன் நன்மைகளை

விளக்கமளிப்பதற்கு எவரும் முன் வந்திருக்கவில்லை. அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியை தழுவுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருந்தது.

நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தம் என்று எம்.சி.சி ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கவிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இல்லாமல் செய்துவிட்டு அரச தலைவராகப் பதவியேற்ற பின்னர் தனது முதல் பயணத்தில் இந்தியாவுக்குச் சென்ற அரச தலைவர் 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுள்ளார்.

மற்றும் புலனாய்வு துறையைச் சக்திமிக்கதாக்குவதற்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுள்ளார்.

அமெரிக்க வழங்குவதாகக் கூறிய நிதியை தவிர்த்துவிட்டு இந்தியாவில் கடனைப் பெற்று நாட்டுக்கு நன்மை செய்வதாக தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அரசு எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிலைப்படுத்தியே அபிவிருத்திகளை மேற்கொள்ளவதாக சில கருத்துக்களும் முன் வைக்கப்படுகின்றன. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை- என்றார். (க-61)

# அவப்பெயரை ஏற்படுத்தவே அலுவலர் கடத்தல் நாடகம்

## குணதாச அமரசேகர கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 5

சுவிஸ் தூதரகத்தின் பெண் அலுவலர் கடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் அரசுக்கு அவப் பெயர் ஏற்படுத்துவதற்காகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட நாடகம் என்று தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்."அரசதலைவராக கோத்தபாய ராஜபக்ச வந்தால் வெள்ளை வாகனம் கலாசாரம் மீண்டும் தோன்றும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தலுக்கு முன்னர் தெரிவித்த கருத்தை நிரூபிக்கவே இந்தக் கடத்தல் நாடகம் என்றும் அவர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவகாரத்தை அடிப்படையாக கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்களின் போது பல சாதகமான விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சிலர் எதிர்பார்க்கின்றனர். சுவிஸ் தூதரக பெண் அலுவலர் கடத்தல் விவகாரம் தொடர்பில் விசாரணையாளர்கள்கூட அறியாத பல விடயங்களை முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, அறிந்து வைத்துள்ளார். இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் முதலில் அவரிடமே விசாரணை நடத்தவேண்டும்.

19 ஆவது அரசமைப்பு திருத்தம் தேவையற்ற விடயமாகும். இதை மாற்றுவதால் எந்தப் பயனும் கிடையாது. தற்போதைய யாப்பு முற்றுமுழுதாகவே மாற்றியமைக்கப்பட வேண்டும்- என்றார்.

மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி கல்யாணந்த பிரானகம செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:சுவிஸ் தூதரக விவகாரம் தொடர்பில் தெரியவந்துள்ள தகவல்களின் மூலம் பல சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ளன.

பாதிக்கப்பட்ட பெண் அமைதியாக இருப்பாராயின் குற்றவாளிகள் தொடர்பில் எந்தத் தகவலையும் பெற்றுக் கொள்ளமுடியாமல் போய்விடும். பொலிஸார் இந்த விவகாரம் சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவுபெற்றுச் சம்பந்தப்பட்ட பெண்ணிடம் விசாரணை நடத்தவேண்டும். என்றார். (த-61)

# நாடாளுமன்ற ஒத்திவைப்பால் அரசு மீது சந்தேகம் வருகின்றது

## ஐ.தே.க. எம்.பி. மரிக்கார் தெரிவிப்பு



கொழும்பு. டிசெ. 5

உரிய காரணிகள் ஏதுமின்றி எட்டாவது நாடாளுமன்றின் மூன்றாவது அமர்வை அரச தலைவர் ஒத்திவைத்துள்ளமை, இடைக்கால அரசின் மீது பெரும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. மக்களுக்கு சேவையாற்றும் விடயங்களுக்கு நாடாளுமன்றில் இடைக்கால அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றஅமர்வை அடுத்த மாதம் முதல் வாரத்துக்கு ஒத்திவைத்து அரசிதழ் வெளியிட்டமைக்கு எவ்வித காரணிகளும் கிடையா.

**கோப்குழுஅறிக்கை**

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி மற்றும் ஏனை ய அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக்குறிப்பிடப்படும் மோசடி தொடர்பிலான அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கப்பட இருந்தது. இதில் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி குறித்த கோப்குழுவின் அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அரசதலைவர் தேர்தல் பரப்புரைகளில் பொது மக்கள் முன்னணியினர் இந்த விடயம் தொடர்பில் அதிகம் கருத்துரைத்தார்கள். தமது ஆட்சியில் பிணைமுறி மோசடி குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் தற்போது அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அவர்களே தடை விதித்து எவருடைய ஆட்சிக் காலத்திலிருந்து இந்தப் பிணைமுறி மோசடி இடம்பெற்றுள்ளது என்பது தொடர்பான உண்மையை நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்குத் தடை விதித்துள்ளனர்.

**எம்.சி. சி ஒப்பந்தம் கைச்சாத்து**


பொதுமக்கள் முன்னணியினர் பல சர்ச்சைகளுக்கும் அரசியல் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட அமெரிக்காவின் மிலேனியம் செலன்ச் கோர்பரேஷன் நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்தமாதம் 31ஆம் திகதிக்குள் கைச்சாத்திடப்பட வேண்டும். இந்தவிடயம் தொடர்பில் இடைக்கால அரசு எவ்விதமான உத்தியோகப்பூர்வமான அறிவித்தலையும் விடுக்கவில்லை.

நாடாளுமன்றுக்கு அறிவிக்காமல் திருட்டுத்தனமான முறையில் பல ஒப்பந்தங்கள் கடந்த அரசில் அதாவது 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த ஒப்பந்தத்தையும் கைச்சாத்திடுவதற்கான ஒரு வழிமுறையே நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைப்பின் ஊடாக இடம்பெறவுள்ளது.

இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார். எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் குறித்து தொடர் பேச்சு நடத்தவேண்டிய அவசியம் கிடையாது.

எழுந்துள்ள சவால்கள் குறித்துக் கட்சியின் தலைவரும் மூத்த உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-61)

## முச்சக்கர வண்டி சாரதியின் முன்மாதிரியான செயற்பாடு



கொழும்பு,டிசெ.5
தென்னிலங்கையைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர், முச்சக்கர வண்டியில் பயணிப்போர் குப்பைகளை வீதியில் வீசாமல் இருப்பதற்கு தனது முச்சக்கர வண்டியில் குப்பைக் கூடை ஒன்றைப் பொருத்தியுள்ளார். அவரது நற்செயலைப் பலரும் பாராட்டி வருகின்றனர். அது தொடர்பிலான ஒளிப் படங்கள், அவரது கருத்துக்களுடன் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. "என்னுடைய முச்சக்கர வண்டியில் பயணிப்பவர்கள் ஏதாவது சாப்பிடுவார்கள். அதில் மிஞ்சும் கழிவுகளை வெளியில் தூக்கி எறிவார்கள். எனது கண் முன்னால், இந்தச் சூழலுக்குச் சென்று சேரும் குப்பைகளைச் சரி செய்ய நினைத்தேன். அதனால் என்னுடைய வாகனத்தில் ஒரு குப்பைக் கூடை ஒன்றைப் பிரத்தியேகமாகப் பொருத்தியுள்ளேன். பயணிகள் தங்களுடைய குப்பைகளை இந்தக் கூடையில் போடலாம். மாலையில் வீடு திரும்பியதும் அல்லது குப்பை கொட்டுவதற்கு அரசு ஒதுக்கியுள்ள இடங்களைத் தாண்டும் போது சேகரித்த குப்பைகளைக் கொட்டிவிடுவேன்."என்று சாரதி தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். (க)

# சிறுபான்மையினரின் பலத்தை பொதுத்தேர்தலில் காட்டுவோம்

## மஹ்றூப் எம்.பி. தெரிவிப்பு



மூதூர்,டிசெ.5
எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறுபான்மை சமூகம் தலைமை அமைச்சரைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற வேண்டும். சிறுபான்மையினரின் பலத்தைக் காட்டுவதற்கு இதுவே சந்தர்ப்பம் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்றூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அதிஉச்சஅதிகாரம்கொண்டசபையாக நாடாளுமன்றம் திகழ்கிறது.

அனைத்துசிறுபான்மைக்கட்சிகளும் இணைந்து சஜித் பிரேம தாசவை தலைமைஅமைச்சராகப்பெரும்பான்மை ஆசனத்துடன் கொண்டு வருவோம். 19 ஆவது திருத்தத்தில் அரச தலைவருக்கான அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. இதனை சிறுபான்மை சமூகம் உணர்ந்து கொண்டுள்ளது. பொதுத் தேர்தலில் 113 ஆசனங்களையாவது பெற்று பெரும்பான்மையை நிரூபித்து நாட்டின் அதிஉச்சஅதிகாரம்கொண்ட சபையைக் கைப்பற்ற எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் . அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய மட்டத்தில் கூடிய பிரதிநிதிகளை இம்முறை பெற்று சிறுபான்மையின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்டும்.

முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டுள்ளது. கட்சி பேதங்களை மறந்து அதிகூடிய ஆசனங்களுடன் நாம் இந்தநாட்டின் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆசனங்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயக வழியில் மீண்டும் நாட்டை முன்னேற்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். என்றார். (க-40)

## ரஞ்சித் சொய்சா காலமானார்



கொழும்பு,டிசெ.5
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா நேற்றுக் காலமானார்.
அவர் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுக் காலை காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இறக்கும் போது அவருக்கு 57 வயது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவர் செயற்பட்டு வந்தார். (க)

# இலங்கையுடனான உறவுகளை மேம்படுத்த ஆவலாக உள்ளோம்

## ஐக்கிய அரபு இராச்சியம் நியூ. தூதுவர்கள் கோத்தபாயவைச் சந்தித்துத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 5
இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்று ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் நியூசிலாந்து இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.
இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் அஹமட் அல்மு அல்லா நேற்றுமுன்தினம் பிற்பகல் அரசதலைவர் அலுவலகத்தில் அரசதலைவர் கோத்தபாய ராஜபக்சவைச் சந்தித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி எதிர்காலத்தில் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு அர்ப்பணிப்புடன் தமது அரசு உள்ளது என்று தூதுவர் உறுதியளித்தார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
புதிய தொலைநோக்குடனான நிகழ்ச்சித் திட்டங்களை பாராட்டிய தூதுவர், அதனை வெற்றிபெறச் செய்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார் என்றும் குறிப்பிட்டார்.
இதேநேரம், இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் ஜோன்னா கேம்பர்ஸ் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரசதலைவர் அலுவலகத்தில் கோத்தபாய ராஜபக்சவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.
இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி, பரஸ்பர நன்மைகளை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளார் என்றும் தூதுவர் உறுதியளித்தார்.
என்று அரசதலைவர் ஊடகப் பிரிவின் பிரதிப் பணிபாளர் மொஹான் கருணாரத்ன செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (து)

# இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயார்

## தூதுவர் அலைனா உறுதி

கொழும்பு,டிசெ.5
நாட்டின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு, பிராந்திய உறவுகளை வலுப்படுத்த, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை நிலைநாட்ட இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயார் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் உறுதியளித்துள்ளார்.
2019 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.எஸ்.இ. பன்னாட்டு மகளிர் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
உள்நாட்டு முதலீடுகள் உட்பட பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகள், இருதரப்புப் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மையமாகக் கொண்ட உறவுகளை வலுப்படுத்த தான் தயாராக இருக்கிறார் என அரசதலைவர் தெரிவித்திருந்தார். அமெரிக்கா இலங்கைக்கான சிறந்த ஏற்றுமதிச் சந்தையாகும், மேலும் அமெரிக்க நிறுவனங்கள் இந்த நாட்டின் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர்களில் ஒன்றாக உள்ளன. இலங்கையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க நிலையான மற்றும் சமமான பொருளாதார வளர்ச்சி அவசியம்.உண்மையான வாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகள், பரஸ்பர வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்பு என்பன நாட்டுக்கு அதிக வளர்ச்சியைக் கொடுக்கும். எவ்வாறாயினும், துரித வளர்ச்சி, பரந்த உறவு, நிலையான கொள்கை, நிலையான அரசியல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பொறுத்தே அவை அமையும். இவை கூட்டாட்சி, ஒழுங்குமுறை நிலைத்தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைக் குறிக்கின்றன, இது இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிக்கும். என்றார். (க)

# கட்டுநாயக்க செல்லும் வீதியின் ஒருபகுதி பூட்டு

கொழும்பு,டிசெ.5
ஆடியம்பலம பகுதியிலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் வரையான வீதியின் ஒரு பகுதி தற்காலிகமாக மூடப்படவுள்ளது.
நாளை மறுதினம் மாலை 6 மணியிலிருந்து எதிர்வரும் 8 ஆம் திகதி நள்ளிரவு வரை குறித்த வீதியின் ஒரு பகுதி(மருங்கு) மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் காரணமாகவே வீதி மூடப்படவுள்ளது. குறித்த காலப்பகுதியில் வானூர்தி நிலையத்துக்குச் செல்லும் மக்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)

# முன்னாள் அமைச்சர்களுக்கு மீண்டும் முக்கிய அறிவிப்பு

கொழும்பு,டிசெ.5
உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வாகனங்களை இதுவரை மீள ஒப்படைக்காத, முன்னாள் அமைச்சர்கள் அவற்றை விரைவாக மீள ஒப்படைக்குமாறு மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோனால் கடிதம் ஊடாக முன்னாள் அமைச்சர்களுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சுகளுக்கான செயலாளர்களது வீடுகளையும், வாகனங்களையும் மீளக் கையளிப்பதற்கு முன்னாள் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் தாமதமாகும் பட்சத்தில், தற்போதைய அமைச்சர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் கடிதத்ததில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மேல் மாகாண டி.ஐ.ஜீ ஆக தென்னக்கோன் கடமையேற்றார்



கொழும்பு, டிசெ. 5
சமுதாயப் பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய தேசபந்து தென்னக்கோன், மேல் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு வழங்கப்பட்டு நேற்று முன்தினம்கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். 2016தொடக்கம் 2018 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராக்கடமையாற்றியஅவர், வன்னியில் இன நல்லுறவைக் கட்டியெழுப்பி மக்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தியிருந்தார். பொலிஸ் கீதம் தமிழில் மொழி பெயர்ப்புஉட்படபலசெயற்பாடுகளை செயற்படுத்தியிருந்தவர். இவர் பேலியகொட பிராந்திய பொலிஸ்மா அதிபராகவும் அதன் பின்னர் சமுதாய பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் கடமையாற்றியிருந்தார். (து)

*வாகனங்களின்*

# காபன் பரிசோதனை கட்டணங்கள் குறைப்பு

*கொழும்பு,டிசெ.5*

வாகனங்களின் காபன் பரிசோதனைக்கான கட்டணம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

காபன் பரிசோதனைக் கட்டணக் குறைப்பு தொடர்பான அரசிதழ் அறிவித்தலையும் நிதியமைச்சு வெளியிட்டுள்ளது.

வற்வரி குறைக்கப்பட்டுள்ளமை காரணமாகவே, மோட்டார் வாகன காபன் பரிசோதனைக்கான கட்டணங்கள் குறை க்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

## மது பானத்துக்கு விரைவில் விலைச் சூத்திரம்

கொழும்பு,டிசெ.5
மதுபானத்துக்கான விலை சூத்திரத்தை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பான அறிவிப்பை இலங்கை மதுவரித் திணைக்களம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ளது.
உள்ளூர் சந்தையில் மதுபானத்தின் தரத்தை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

*சுவிஸ் தூதரக பெண் அலுவலரின் கணவர்*

## வெளிநாடு செல்லத்தடை விதிக்கும் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 5
கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரக பெண் அலுவலரின் கணவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்குமாறு, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றில் கோரியபோதும் அதை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சுவிற்சர்லாந்து தூதரகத்தில் கடமையாற்றும் உள்நாட்டு தமிழ் பெண் அலுவலர் கடத்தப்பட்டு சில மணிநேரம் தடுத்து பாலியல் துன்புறு த்தலுக்கு உட்படுத்தப்பட்டு விசாரிக்க ப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக, குற்ற ப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதப்படுகொலை விசாரணைப் பிரிவு விசார ணைகளை முன்னெடுத்து வருகிறது.

நேற்றுமுன்தினம் கொழும்பு முதன்மை நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு அதன் முதல் அறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிவான், குறித்த பெண் டிசெம்பர் 9ஆம் திகதிவரை நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து உத்தரவிட்டார். அதன் போதே அவரின் கணவருக்கும் வெளிநாடு செல்லத் தடை விதிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்தினர் கோரினர். எனினும் அந்தப் பெண்ணின் கணவர் கடத்தல் குறித்து சில தகவல்களை அறிந்திருந்தாலும் அவை விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையில்லை. எனவே அவருக்கும் பயணத் தடை விதிக்கு மாறு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விடுத்த கோரிக்கையை நிராகரி க்கிறேன் என்று நீதிவான் லங்கா ஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து விவரித்த சி.ஐ.டி.யின் மனிதப்படுகொலை விசாரணை அதிகாரி ரஞ்சித் முனசிங்க, கடத்தலுக்கு முன்னதாக பெண்ணின் நடமாட்டம் குறித்த கூகிள் வரைபடங்கள், கடத்தலுக்குப் பாவிக்கப்பட்ட வாகனத்தின் படங்களை சுவிஸ் தூதரகம், குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்திடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் சுவிற்சர்லாந்து தூதரகம் வழங்கிய முறைப்பாட்டில், குறித்தபெண்அதிகாரி வெள்ளை மகிழுந்தில் (காரில்) கடத்தப்பட்டார் என்றும் அவரை வாகனத்துக்குள் அடைத்து வைத்து பாலியல் துன்புறுத்தல் புரிந்துள்ளனர் என்றும் அவருடைய அலைபேசியை பலாத்காரமாகப் பறித்து அதில் இருந்த தகவல்களைப் பெற்றுள்ளனர் என்றும் சுவிற்ஸர்லாந்தில் அடைக்கலம்புகுந்துள்ளதாகக் கூறப்படும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா குறித்து கடத்தல்காரர் விசாரித்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

தூதுவர் சார்பில் அந்த தூதரகத்தின் இரண்டாம்நிலைஅதிகாரிஅதில்கையொப்பம் இட்டுள்ளாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கடந்த நவம்பர் 25ஆம் திகதியே இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுவதுடன் முறைப்பாடு கிடைக்கப் பெற்ற நவம்பர் 27 முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குறித்த விசாரணைப் பிரிவின் மனிதப் படுகொலை விசாரணை அதிகாரி ரஞ்சித் முனசிங்க தெரிவித்தார். "இது தொடர்பாக சி.ஐ.டி. அதிகாரிகள் சுவிற்சர்லாந்து தூதுவருடன் கலந்துரையாடியுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் தூதரக பெண் அதிகாரி இலங்கைத் தமிழ்ப் பெண். அவர் அந்தத் தூதரகத்தில் விசா அல்லது குடிவரவு விவரங்கள் தொடர்பிலான பிரிவில் சேவையாற்றியுள்ளார். அந்தப் பெண் தொடர்பிலான அடையாளத்தையும்முறைப்பா ட்டின்போது தூதரகம் வழங்கவில்லை. அந்தப் பெண்ணின் கணவர் தனியார் வங்கியில் பணிபுரிகிறார்.

அவர்கள் வசிக்கும் வீடு மருதானை மாளிகாகந்த பகுதியில் உள்ளது. அங்கு அதிகாரிகள் வாக்குமூலம் பெறச் சென்றனர். எனினும் வீடு பூட்டியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் பெண் இதுவரை வாக்குமூலம் வழங்கவில்லை. தூதரகமும் அவரை முன்னிலைப் படுத்தவில்லை. அவருடைய கணவர், பிள்ளைகள், தாய் தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது" என்று ரஞ்சித் முனசிங்க தெரிவித்தார். இதையடுத்து லங்கா ரஞ்சித் முனசிங்க விடம் நீதிவான் கேள்விகளைத் தொடுத்து விடயங்களைத் தெளிவு படுத்திக்கொண்டார். விடயங்களை ஆராய்ந்த நீதவான், அவர் வாக்குமூலம் வழங்கும்வரை நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்தார். (து)

*சுவிஸ் தூதரக அலுவலர் கடத்தல்:*

## இன்னும் ஓரிரு வாரங்களில் உண்மை வெளிப்படுத்தப்படும்

*இராஜாங்க அமைச்சர் கெஹகலிய கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ. 5
இலங்கையிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரகஅலுவலர்கடத்தப்பட்டுவிடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஓரிரு வாரங்களில் சாட்சியுடன் உண்மைகள் வெளிப்படுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அவருடைய அமைச்சில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அலுவலர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திக் கடத்தப்பட்டார் என்று ராஜித சேனாரத்ன கூறுகின்றார். இது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல். இவர்கள் இதற்கு முன்னரும் இவ்வாறான கீழ்த்தரமான அரசியலில் ஈடுபட முயற்சித்து. அந்த முயற்சிகள் தோல்வியடைந்தமையால் மீண்டும் அவ்வாறு செயற்பட ஆரம்பித்துள்ளனர். இந்த நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட வெற்றியை இவ்வாறான அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து வீணடிக்க முயற்சிக்கிறார்கள். நீதிமன்று ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். எந்த நாட்டு முதலீட்டா ளர்களாக இருந்தாலும் இரு முக்கிய காரணிகளை முதலில் அவதானிக்கின்றனர். அவற்றில் முதலாவது தேசிய பாதுகாப்பு. கடந்த அரசில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரசியல் நிலைவரம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அவதானிக்கும் இரண்டாவது காரணி. கடந்த அரசில் அரசியலும் உறுதியானதாக இருக்கவில்லை. நாம் இந்தக் காரணிகளை உறுதிப்படுத்தியிருக்கின்றோம்-என்றார். குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி குடும்பத்துடன் சுவிற்சர்லாந்தில் தஞ்சமடைந்திருக்கிறார். அதனையடுத்து தூதரக அலுவலர் வாகனத்தில் கடத்தப்பட்டு சுமார் 3 மணித்தியாலங்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். (து-31)

### மத்திய வங்கி திறைசேரி முறி விவகார

# தடயவியல் கணக்காய்வு அறிக்கை பகிரங்கமாகாது

## கோப் குழுவின் தலைவர் தெரிவிப்பு இந்தக் குழுவும் திங்களுடன் வலுவிழந்துவிட்டது

கொழும்பு, டிசெ. 5

மத்திய வங்கி திறைசேரி முறி விவகாரம் தொடர்பில் தடயவியல் கணக்காய்வு அறிக்கையை பகிரங்கப்படுத்தாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடயவியல் கணக்காய்வு பற்றிய ஐந்து அறிக்கைகளை கோப் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரமே பார்வையிட முடியும் என்றும் கோப் குழுவின் முன்னாள் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற அமர்வுகளை முடிவுக்குக் கொண்டுவந்ததால் கோப் குழுவும் கலைக்கப்படுகின்றது.

சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு மாத்திரம் இந்த அறிக்கைகளைப் பயன்படுத்த முடியும் என்று சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதனால் இவற்றை இரகசிய ஆவணங்களாகப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியில் கொடுக்கல் வாங்கல்களில் இடம்பெற்ற முறைமை தொடர்பில் தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கை கோப் குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்டமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காகக் கோப் குழு நேற்றுமுன்தினம் கூட விருந்தது. எனினும் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டமையால் இந்தக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை.

கோப் குழுவின் முன்னாள் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்திருப்பதாவது:

தடயவியல் கணக்காய்வு பற்றிய ஐந்து அறிக்கைகள் மத்திய வங்கியிடமிருந்து கிடைத்துள்ளன. இது குறித்த அடுத்த நடவடிக்கைகளைத் தெரிவுக்குழு தீர்மானிக்கவேண்டும். எனினும் அரசதலைவரின் அரசிதழ் அறிவித்தலையடுத்து கோப் குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டியுள்ளன. தடயவியல் கணக்காய்வு பற்றிய ஐந்து அறிக்கைகளை கோப் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரமே பார்வையிட முடியும். சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு மாத்திரம் இந்த அறிக்கைகளைப் பயன்படுத்த முடியும் என்றும் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய தடயவியல் கணக்காய்வு அறிக்கை பகிரங்கப்படுத்தப்படமாட்டாது. கோப் குழு நியமிக்கப்பட்ட பின்னர் அதன் உறுப்பினர்களின் அனுமதியுடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழு செயலகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி திறைசேரிமுறி விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கையை அடுத்த கோப் குழு நியமிக்கப்படும் வரை கோப் குழு செயலகத்தில் இரகசிய ஆவணமாகப் பேணப்படும்.

நாடாளுமன்ற புதிய அமர்வுகள் கூடும் வேளையில் புதிதாக தெரிவுக்குழுக்களை நியமிக்க வேண்டும். கோப் குழுவும் புதிதாக தலைவர் ஒருவரின் கீழ் நியமிக்கப்படும். அவ்வாறு இருக்கையில் நாம் விசாரணை நடத்திய அறிக்கையை அவரால் தொடர முடியும். அதற்கு ஏற்றாற்போல் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே புதிய கோப் குழுவுக்கும் குழுவின் தலைவருக்கும் கணக்கறிக்கைத் தகவல்களை ஆராய்ந்து அவற்றை நீதிமன்றில் சமர்ப்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றேன். - என்றார். (து-31)

# புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்துகொள்ளவேண்டும்

## பாகிஸ்தான் அயலுறவு அமைச்சர் இலங்கையிடம் நேரில் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 5

பாதுகாப்புக் கூட்டுறவைப் பலப்படுத்துவதில் இலங்கை அரசின் முயற்சிகளைப் பாராட்டிய பாகிஸ்தான் நாட்டு அயலுறவு அமைச்சர் மக்தூம் ஷா மெஹ்மூத் குரேஷி, அர்ப்பணிப்புள்ள அயல் நாட்டவர் என்ற வகையில் பரஸ்பரம் உதவும் நோக்குடன் இருதரப்பினரும் புலனாய்வுகளை பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்.

இரண்டு நாள்கள் பயணமாக இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அயலுறவு அமைச்சர் மக்தூம் ஷா மெஹ்மூத் குரேஷி, இலங்கை அயலுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை இலங்கை அயலுறவு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார் என்று இலங்கை அயலுறவு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் - இலங்கையுடன் ஒன்றிணைந்து பணிபுரிய எதிர்பார்த்துள்ளது. நீண்டகால வர்த்தக உறவுகளைக்கொண்டிருக்கும் இரு நாடுகளும் தற்சமயம் முழுவதுமாக மேம்படுத்தப்படாததும் பொருளாதார உறவுக்கான அதிக சாத்தியங்களைக் கொண்டிருப்பதுமான பொருளாதாரக் கூட்டுறவை வலுப்படுத்தி, உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லவேண்டுமென்று பாகிஸ்தான் அமைச்சர் வலியுறுத்தினார்.

முதலீடுகளுக்குச் சாத்தியமான துறைகளை இனங்கண்டு இலங்கை வணிகத்துறை பாகிஸ்தானுக்குச் சென்று அங்கு பொருத்தமான சகவணிகங்களுடன் இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கான ஒருநிகழ்ச்சிநிரலைத் திட்டமிடுமாறும் அந்த அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான முதலாவது இருதரப்பு சுயாதீன வர்த்தக உடன்படிக்கையான பாகிஸ்தான் - இலங்கை சுயாதீன வர்த்தக உடன்படிக்கையை இரு நாடுகளும் இணைந்து வலுப்படுத்தவேண்டுமென்றுதான் எதிர்பார்த்திருக்கின்றேன். என்றும் பாகிஸ்தான் அயலுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

அயலுறவு அமைச்சர் குரேஷி, அரசதலைவர் கோத்தபாய மற்றும் தலைமைஅமைச்சர் மகிந்த ஆகியோரையும் சந்தித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகள்

## இன்று முக்கிய சந்திப்பு

கொழும்பு,டிசெ.5

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது எழுந்துள்ள தலைமைத்துவ முரண்பாடுகள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான விடயங்களை ஆராயும் முக்கிய சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளதாவது: கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றமை உண்மையே, ஆனால் அவை கட்சியைப் பிளவுபடுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ விடயத்தில் கட்சியின் செயற்குழுவில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கு முதலில் செயற்குழு கூட வேண்டும். இன்று வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை கூட்டவும், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் கூட்டத்தை கூட்டவும் தீர்மானித்துள்ளோம். சகலரும் ஒன்றிணைந்து ஆரோக்கியமான தீர்மானம் எடுக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் முழுமையான ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது. - என்றார்.

கட்சியின் மூத்த உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று வலியுறுத்தும் நபர்கள் முதலில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டங்களில் கலந்து ஆரோக்கியமான தமது நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் குறித்த முரண்பாடுகளை நாடாளுமன்றம் கூடாமல் தீர்க்க முடியாது. - என்றார் . (க-61)

# 19ஆவது திருத்தத்தை நீக்கினால் ஆணைக்குழுக்கள் செயலிழக்கும்

## இது அபாயமானது என்கிறார் அஸாத்சாலி

கொழும்பு. டிசெ. 5

ஆட்சிக்குவரும் முதன்மையான இரண்டு கட்சிகளும் அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்தபோது மோசடிகளில் ஈடுபட்டவர்களைப் பாதுகாத்தே வந்திருக்கின்றன. யாரையும் சிறைக்கு அனுப்பிய வரலாறு இல்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும். அதாவது 19ஆவது திருத்தம் இல்லாமலாக்கப்பட்டால் ஆணைக் குழுக்கள் அனைத்தும் செயலிழந்துவிடும் அபாயம் இருக்கின்றது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரி - ரணில் அரசுகள் ஆட்சிக்கு வரும்போது ராஜபக்ச அரசில் இடம்பெற்ற ஊழல் மோசடிக்காரர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்திருந்தது. ஆனால் மோசடிக்காரர்களைப் பாதுகாத்து வந்தமையைத் தவிர யாரையும் சிறைக்கு அனுப்பவில்லை. தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசும் கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக தெரிவித்திருக்கின்றது. ஆனால் அதற்கான எந்த நடவடிக்கையையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

தற்போது இருக்கும் அரசு கடந்த காலத்தில் மேற்கொண்ட ஊழல் மோசடிகளைவிடவும் குறைவானதாகவே கூட்டரசின் காலத்தில் அரசில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கும் என்று நினைக்கின்றேன். என்றாலும் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் கலாசாரம் மாற்றப்படவேண்டும். சாதாரண பொதுமகனுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

19ஆம் திருத்தத்தை இல்லாமலாக்கவேண்டும் என்று அரசதலைவர் கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார். 19ஆம் திருத்தம் இல்லாமலாக்கப்பட்டால் சுயாதீன ஆணைக்குழுக்களும் இல்லாமலாக்கப்படும் அபாயம் இருக்கின்றது. கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றை ஒரு மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார். - என்றார். (து-31)

# மன்னார் தோட்டவெளியில் தொடர் மண் அகழ்வுகள்!

## தடுக்குமாறு கோரி மக்கள் போராட்டம்

மன்னார், டிசெ. 5

மன்னார் தோட்டவெளி பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற மண் அகழ்வை நிறுத்தக்கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர். கொட்டும் மழைக்கு மத்தியிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மன்னார் தலைமன்னார் தோட்ட வெளி பகுதியில் காடு சார்ந்த நிலப் பிரதேசத்தைக் கொண்ட கிராமத்தில் சுமார் 100க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் குறித்த பகுதியில் மீன் வளர்புத் திட்டம் செயல்படுத்துவதாகக் கூறிபல மாதங்கள் தொடர்ச்சியாக மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதையடுத்தே நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

'இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. மீன் வளர்ப்புத் திட்டம் இங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் உரிய ஆவணங்கள் எமக்குக் காண்பிக்கப்படவில்லை. இது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இந்தப் பகுதியில் இருந்து மண் அகழ்வதை பொதுமக்களாகிய நாம் எதிர்க்கின்றோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (ம-56)

## ஐ.தே.க. தலைமைத்துவத்தை சஜித்துக்கே வழங்கவேண்டும்

*ஒரு வாரத்தில் பதில் இல்லாவிடில் மாற்றுவழியென சஜித் அணியினர் விடாப்பிடியாகவுள்ளனர்*

கொழும்பு, டிசெ. 5

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் ஒருவார காலத்தில் சஜித் பிரேமதாசவுக்கு வழங்க வேண்டும். இல்லையேல் மாற்று வழியில் பயணிக்கத் தயார் என்றுகூறி ஐக்கிய தேசிய கட்சியின் சஜித் தரப்பினர் விடாப்பிடியாகவுள்ளனர். பொதுத் தேர்தலில் மாற்றுத் தலைமைத்துவமே அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் இல்லத்திலெ, கடந்த திங்கட்கிழமை கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 40 க்கும் அதிகமான உறுப்பினர்களும் கலந்துரையாடினர். அடுத்ததாக முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் என்னவென்பது குறித்தும் தேர்தலில் எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேவர்தன தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தல் குறித்தே அதிக கவனம் செலுத்தினோம். ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாச பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் அவருக்கே வழங்க வேண்டும் என்பதுமே எங்கள் அனைவரினதும் நிலைப்பாடு. ஆகவே நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தையும் செயற்குழுவையும் உடனடியாகக் கூட்டி இந்த விடயத்துக்குத் தீர்வு காண வேண்டும். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கட்சி தலைமைப்பொறுப்பும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் நாளின் பண்டார தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடையக் காரணம், எமக்குள் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளே. தற்போதும் அதே தவறுகளுடன் நாம் பயணிக்க முடியாது. முதலில் கட்சியில் பரந்தளவில் மாற்றங்கள் செய்யவேண்டும். ஆகவே புதிய தலைமைத்துவம் ஒன்றை உருவாகிக்கொள்ள முயற்சிகளை எடுக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பன சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட வேண்டும். அதனையே தொடர்ச்சியாகக் கூறி வருகின்றோம். ஒரு வாரத்தில் இதற்குப் பதில் கிடைக்க வேண்டும். சில தினங்களில் கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். மாற்றங்கள் ஏற்படாவிட்டால் மாற்று வழிமுறையைக் கையாள நாம் தயராக உள்ளோம். இப்போதும் ஐக்கிய தேசிய கட்சியின் 5க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் சஜித் பிரேமதாசவுக்கே உள்ளது. இதனை ரணில் விக்கிரமசிங்க கவனத்தில் கொள்வார் என்று நம்புகின்றோம் - என்றார். (த-31)

## கொழும்பில் நேற்று அடைமழை வெள்ளத்தில் மூழ்கின வீதிகள்



கொழும்பு, டிசெ. 5

கொழும்பில் நேற்றுக் காலை முதல் பெய்த கடும் மழை காரணமாக சிறிய மற்றும் தாழ்நில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன்படி பொறளை விஜேராம வீதி பெரும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தும்முல்ல, ஹோட்டன் பிளேஸ், பேஸ்லைன் வீதி, மைக்கல் சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ள நீர் வீதிகளில் தேங்கியிருப்பதால் சில வீதிகளில் போக்குவரத்து நெரிசல் நிலை ஏற்பட்டிருக்கின்றது. (ம-22)

## கிளி., முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபராக மகேஸ்



கிளிநொச்சி, டிசெ. 5

நீண்ட நாள்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபராக மகேஸ் சேனாரட்ன நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி இரணைமடு சந்தியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் மதியம் 11.30 மணியளவில் தனது கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.

மக்களுக்கு சிறந்த சேவையை உரிய முறையில் வழங்கவே பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டது. அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நான் செயற்படுவேன். இந்தப் பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்பு, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், குற்றச்செயல்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அதிக அக்கறையுடன் செயற்படவுள்ளேன் என்று தனது பதவியேற்பில் வைத்து அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்னாயக்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் வி.பி.ஜே.புஸ்பகுமார, கிளிநொச்சி தலைமை பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி ஈ.ட்பிள்யு.ரி.புஸ்பகுமார, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-6)

# அரசியல்வாதிகளின் ஒளிப்படங்களை வீதிகளிலிருந்து அகற்றுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

வீதியோரங்களிலும், வளைவுகளிலும் பொருத்தப்பட்டுள்ள அரசியல்வாதிகளின் ஒளிப்படங்களை உடன் அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், சகல பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அரச தலைவரின் செயலர் பி.பி.ஜெயசுந்தர சகல அமைச்சுக்களின் செயலர்கள், முதன்மைச் செயலர்கள், ஆளுநரின் செயலர்களுக்கு இது தொடர்பில் கடிதம் அனுப்பியுள்ளார். அதன் பிரகாரம் ஆளுநரின் செயலர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சகல வீதி பெயர்ப்பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரசியல் பிரமுகர்களின் ஒளிப்படங்கள் அகற்றப்பட வேண்டும். அத்துடன் உட்கட்டுமானத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட வீதியின் பெயரை மட்டுமே காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்ற விவரங்கள் உடனுக்குடன் ஆளுநரின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அரச தலைவரின் செயலர் அறிவித்துள்ளார்.

அதேநேரம் சகல அரச நிறுவனங்களிலும், இலங்கை அரசின் இலச்சினையைக் காட்சிப்படுத்தி அறிக்கையிடுமாறு கோரப்பட்டுள்ளது. பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள்- பிரதேச செயலர்களோடு இணைந்த வகையில் வீதி விளம்பர பலகையில் இடப்பட்ட ஒளிப்படங்களை வர்ணம்பூசி அழிப்பதற்கு அவசர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய உயிரோடு உள்ள, செயற்பாட்டில் உள்ள அரசியல்வாதிகளின் வீதி பெயர்ப்பலகைகளை அகற்றுமாறு கோரப்பட்ட போதும், எவ்வித நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட தேர்தல் அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-50)

### யாழ்ப்பாண...

திகதிகளில் பொது மட்டமளிப்பு விழா இடம்பெறும். விழாவில் ஆயிரத்து 368 உள்வாரிப் பட்டதாரிகளும், 64 பட்டப் பின் படிப்புப் பட்டதாரிகளும், 348 வெளி வாரிப் பட்டதாரிகளும், 31 டிப்ளோமா பட்டதாரிகளும் பட்டங்களைப் பெறவுள் ளனர். பட்டமளிப்பு விழா 11 அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. முதலாவது அமர்வு நாளை 6ஆம் திகதி காலை 9 மணி முதல் 10.15 மணி வரையும், இரண்டா வது அமர்வு காலை 10.45 மணி முதல் 12.15 மணி வரையும் மூன்றாவது அமர்வு பகல் 1.30 மணி முதல் 2.45 மணி வரையும் நான்காவது அமர்வு மாலை 3.15 மணி முதல் 4.30 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

7ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரை ஐந்தாவது அர்வும், 10.30 மணிமுதல் 11.30 மணிவரை ஆறாவது அமர்வும், பகல் 12 மணிமுதல் ஒரு மணி வரை ஏழாவது அமர்வும், 2 மணிமுதல் 3 மணிவரை 8ஆவது அமர்வும் இடம் பெறும். 8ஆம் திகதி பகல் ஒரு மணியில் இருந்து ஏனைய அமர்வுகளும் இடம்பெ றவுள்ளன.

இந்த அமர்வுகள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளன. பட்ட மளிப்பு விழாவைத் தொடர்ந்து 8ஆம் திகதி 5.30 மணியில் இருந்து 7.30 மணிவரை கலாசார நிகழ்வுகளும் கைலாசபதிக் கலையரங்கில் இடம்பெ வுள்ளன - என்றார். (க-21)

### கோத்தாவை...

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

'கட்டுநாயக்க பகுதியில் வைத்து அரச தலைவர் கோத்தபாயவைப் படுகொலை செய்ய முயற்சித்தார்கள் எனத் தெரி வித்து வடக்கு, கிழக்கு மற்றும் மலைய கத்தைச் சேர்ந்த ஐவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள னர். அவர்களில் நால்வர் தமிழர்கள் ஒருவர் முஸ்லிம்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச அல்லது அவரின் குடும்பத்தில் எவராவது கொலை செய்யப்பட்டால் பெரிய பணத் தொகையுடன் வெளிநாடுகளில் நிரந்தர வசிப்பிடத்தைப் பெற்றுக்கொள்ளவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த முகமது றிப்கான், கிளிநொச்சி அக்கரா யன் குளத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் மதன், விசுவமடு தர்மபுரத்தைச் சேர்ந்த வேலு கோணேஸ்வரம், விசுவமடு கல் லாறு பிரதேசத்தைச் சேர்ந்த குணரத்னம் நகுலேஸ்வரன் மற்றும் மஸ்கெலியா வைச் சேர்ந்த ஆரியராஜன் கமலராஜா என்பவர்களே கைதுசெய்யப்பட்ட வர்களாவர்.

சீதுவ ஜயவர்தனபுர அமந்தோலுவ பிர தேசத்தில் வீடொன்றில் இவர்கள் தற்கா லிகமாகத் தங்கியிருந்துள்ளனர். கடந்த 28ஆம் திகதி இந்தச் சந்தேகநபர்கள் ஐவரும் ஒன்றிணைந்து மதுபானம் அருந்தி இந்தச் சூழ்ச்சியைத் தீட்டியுள்ள னர்.

இதில் முக்கிய சூத்திரதாரியாக றிப்கான் என்பவர் இனங்காணப்பட்டுள்ளார். இவர் வெளிநாடுகளில் வேலை செய்த வர் என்றும், ஹிந்தி மற்றும் பிறமொழி களில் பரிச்சயமானவர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. இவர்கள் கடந்த திங்கட் கிழமை கைது செய்யப்பட்டு நேற்று மினு வாங்கொட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். றிப்கா னைத் தவிர ஏனையவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். றிப்கானை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 72 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசா ரிக்கப்பட மன்று உத்தரவிட்டது. (ம-22)

### கிணற்றில்...

தாவது:

நேற்று மாலை நான்கு மணியளவில் தாய் வெளியே சென்ற சமயம் தாயுடன் சென்ற சிறுவன் இடைநடுவே தாயை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்துள்ளான். இவ் வாறு வந்த வழியிலேயே சிறுவன் தடு மாறி விழுந்துள்ளான் என்று கருதப்படு கிறது. பின்னர் கிணற்றுள் இருந்து சிறு வன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதி லும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந் தான். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (ம-26)

### இரண்டாம்...

பிரேமதாஸ மீண்டும் தீவிர அரசியலுக்கு இறங்கியுள்ளார். இதைமுன்னிட்டு அவர் விகாரைகளில் தொடர்ச்சியாக மக்கள் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

கொழும்பு 02 வோக்ஸ்ஹால் வீதியி லுள்ள உள்ள புதிய ஜனநாயக முன்ன ணியின் தேர்தல் செயல்பாட்டு அலுவல கத்தில் இன்று பொதுமக்கள் சந்திப்பில் ஈடுபடவுள்ள சஜித் பிரேமதாச, தொடர்ச்சி யாக விகாரைகளில் அதிகளவான மக் கள் சந்திப்புக்களை நடத்தவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

### யாழ்...

பல்வேறு இடங்களுக்கும் பரவலாம் என்று கருதப்படுவதாலும் அடுத்த இரண்டு வாரங்களுக்கு நகரப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் மேலும் தெரி வித்தார். (ம-105)

### அநுராதபுரம்...

வதாகக் கூறினார்கள். மேலதிக அறிவித் தல் வரும்வரை எமது மாவட்டங்களில் உள்ள சிறைச்சாலைகளில் எம்மைத் தினமும் கையெழுத்து இடுமாறு அவர் கள் கூறினார்கள். அதற்கிணங்க நான் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தின மும் கையெழுத்திட வேண்டும்.

10 வருடங்கள் எனக்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும், தண் டனைக் காலம் முடிவடைதற்கு முன்ன தாகவே நான் விடுதலை செய்யப்பட்டுள் ளேன். மேலும் பலர் இவ்வாறு விடுதலை செய்யப்படலாம் என்று நம்புகின்றேன்' என்றார்.

ஆனால், 7 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட் டமை தொடர்பில் அரசோ அல்லது சிறைச்சாலை அதிகாரிகளோ இன்ன மும் தகவல் எதனையும் வெளியிட வில்லை. (ம-22)

### அடிகாயங்க...

னம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று கோப்பாய் பொலி ஸார் தெரிவித்தனர்.

கல்வியங்காடு பகுதியில் உள்ள பிள்ளை யார் கோவிலுக்குப் பின்புறமாக உள்ள வாய்க்கால் பகுதியில் குறித்த இளைஞன் பலத்த அடிகாயங்களுடன் வீழ்ந்து கிடப் பதை அவதானித்த பொதுமக்கள் உடன டியாக பொலிஸாருக்குத் தகவல் தெரி வித்தனர். இதையடுத்தே அவர் மீட்கப் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட் டார்.

காயங்களுக்கு உட்பட்டவர் யாழ்ப்பாணத் தில் இயங்கும் ஒரு ஆயுதக் குழுவின் தலைவரின் சகோதரன் என்று தெரியவ ருகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-106-105)

### ஏப்ரல்...

மாதத் தொடக்கத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஏப்ரல் 25, 27 அல் லது 28ஆம் திகதிகளில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்றும் அவர் தெரிவித் தார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற அமர்வினை ஒத்திவைப்பதாக அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச வர்த்த மானி அறிவித்தலை விடுத்திருந்தார். எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் அல்லது மார்ச் மாத ஆரம்பத்தில் நாடா ளுமன்றத்தைக் கலைத்து அதன் பின் னர் ஏப்ரல் மாத இறுதியில் நாடாளுமன் றத் தேர்தலுக்குச் செல்ல கோத்தபாய அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்க்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கடத்தப்பட்டமைக்கு...

பட்டார் எனக் கூறப்படும் விடயம் மற்றும் அவர் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் சாட்டு குறித்து அரசாக நாம் எமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டி யுள்ளது.

சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்ப டும் 25ஆம் திகதி இது குறித்த முறைப் பாடுகள் எவையும் பதியப்படவில்லை. 27ஆம் திகதி சுவிஸ் தூதுவர் என்னைச் சந்தித்த நேரத்தில் இந்த விடயம் குறித்து என்னிடம் அறிவித்தார். அவர் முன்னி லையிலேயே பதில் பொலிஸ்மா அதிப ருக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுத்து குறித்த காரணிகள் தொடர்பில் விசாரணை நடத்தக் கோரினேன்.

தலைமை அமைச்சரும்கூட இந்த விட யம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார். எனினும், 26ஆம் திகதியே பன்னாட்டு ஊடகம் ஒன்றிலும் இன்னொரு பன்னாட்டு இணையத்தளத்திலும் இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டது. அது குறித்து எமக்கு எதனையும் கூற முடியாது.

எவ்வாறு இருப்பினும் 27ஆம் திகதியில் இருந்து குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் முழுமையான விசாரணைகளும் உண் மையைக் கண்டறியும் பணியும் ஆரம் பிக்கப்பட்டிட்டது.

சுவிஸ் தூதரகம் எம்மிடம் வழங்கிய தகவல் கள் மட்டுமே இந்தச் சம்பவத்தில் ஆதார மாக இருந்த நிலையில் அதனை வைத்து ஏனைய அனைத்தையும் எமது பொலி ஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் உரிய பெண் அதிகாரி இதுவரை தானாக வாக்கு மூலம் எதனையும் வழங்கவில்லை. வாக்குமூலம் தாருங்கள் எனக் கேட்டும் இன்றைவரை அவர் வாக்குமூலம் வழங் காது தவிர்த்து வருகின்றார்.

இன்றும் அவர் சுகவீனமான நிலையில் இருப்பதால் அவரால் வாக்குமூலம் வழங்க முடியாது போயுள்ளது என்று சுவிஸ் தூதரகத்தினர் கூறி வருகின்றனர். எனினும், முவைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் அன்றைய தினம் இடம்பெற்ற சூழலுக்கும் இடையில் எந்த வித தொடர்புகளும் ஏற்படுவதாகத் தெரிய வில்லை.

அவரது அன்றைய நாள் பயணங்கள், அவர் வந்து சென்ற இடங்கள் என அனைத்தும் அறிந்துகொள்ள முடிந்துள்ளது. அவற்றில் இவ்வாறான கடத்தல் ஒன்று இடம்பெற்றதாகக் கருது வது கடினமான விடயமாக உள்ளது.

எவ்வாறிருப்பினும் இன்றைய தினம் இலங்கையில் உள்ள சகல தூதரகங்க ளுக்கும் உயர்ஸ்தானிகராலயங்களுக் கும் அழைப்பு விடுத்து தூதுவர்கள் மற் றும் உயர்ஸ்தானிகர்களுடன் சந்திப் பொன்றை நடத்தி அரசின் நிலைப்பாடு மற்றும் இந்தச் சம்பவத்துடன் இதுவரை கண்டறியப்பட்ட தகவல்கள் என அனைத் தையும் முன்வைத்துள்ளோம். எமது தரப்பு நியாயங்களை நாம் முன்வைத் துள்ளோம்.

குறித்தபெண் அதிகாரிசுகயீனமாகவுள்ள காரணத்தால் சுவிஸ் நாட்டின் வைத்தியர் ஒருவரின் பரிந்துரைக்கு அமைய குறித்த பெண் அதிகாரியை சுவிஸுக்கு அனுப்ப வேண்டும் என எமக்குக் கடிதம் மூலமாக சுவிஸ் தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த பெண் யார்? எங்கு உள்ளவர்? இலங்கைக் குடிமகளா? அவர் குறித்து கூறும் சம்பவம் உண்மையா? பொய்யா? அவரின் வாக்குமூலம் என்ன? அவரின் கடவுச் சீட்டு எது? என்பவை குறித்து தெரி யாது எவ்வாறு ஒரு நபரை நாட்டை விட்டு வெளியேற்றுவது என்ற சட்ட ரீதியிலான கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பில் நீதிமன்றம்கூட இடை உத்தரவை பிறப்பித் துள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதிக்குள் வாக்குமூலம் வழங்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் எந்தவித ஆதாரமும் இல்லாத ஒரு விடயத்தில் இன்று பன்னாட் டுச் சமூகமும் எதிர்க்கட்சிகளும் அரசின் மீது விரல் நீட்டுவது அரசையும் நாட்டின் புதிய ஆட்சியையும் அழுத்தங்களுக்கு உட்படுத்தும் நோக்கத்தில் என்ற சந்தே கம் எழுந்துள்ளது.

கடந்த ஆட்சியில் இராஜதந்திரிகளுடன் இணைந்து செயற்பட்டவர்கள் இன்று எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அதே காரியத்தை முன்னெடுத்து வருகின் றனர்.

சுவிஸ் தூதரகத்துடன் நாம் நெருக்க மான நட்புறவைப் பேணி வருகின்றோம். சுவிஸ் இலங்கை நட்புறவில் எந்த விரிச லும் விழுவதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம். தற்போதும் சுவிஸ் அயலுற வுத்துறை அமைச்சருடன் நாம் பேசி யுள்ளோம். அதுமட்டுமல்ல குறித்த பெண் அதிகாரி தைரியமாக தனது வாக் குமூலத்தை வழங்கினால் அடுத்த கட்ட மாக அரசு நடவடிக்கை எடுக்கும். பெண் அதிகாரிக்கும் அவரது குடும்பத்துக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு தயாராகவே உள்ளது. ஆகவே, இந்தக் காரணிகளை வெளிப்படுத்த உரிய பெண் அதிகாரி வாக்குமூலம் வழங்கியாக வேண்டும்' - என்றார். (ம-22)

### தனிப்பட்ட...

ஆயிரத்து 474 பரீட்சார்த்திகள் பரீட்சைக் குத் தோற்றுகின்றனர். இவர்களில் பா சாலைப் பரீட்சார்த்திகள் 24 ஆயிரத்து 669 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 26 ஆயிரத்து 805 பேரும் உள்ளனர். இதன் அடிப்படையில் பாடசாலைப் பரீட் சார்த்திகளை விட தனிப்பட்ட பரீட்சார்த்தி களே அதிகம் தோற்றியுள்ளனர். பரீட்சை கள் 364 பரீட்சை நிலையங்களில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (க-7)




பனிப்பொழிவால் சூழப்பட்ட நவீன சொகுசு நகரத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார் வடகொரிய அரச தலைவர் கிம் ஜோங் உன். (ஒ,5)

# பூமியின் வரலாற்றில் இந்த ஆண்டே மிக அதிக வெப்பம் தாக்கியது

## அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவு




மட்ரிட், டிசெ. 5

உலக வானிலை மையம் நடத்திய புவி வெப்பமயமாதல் தொடர்பான ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

அந்த ஆய்வில் பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகம் இயந்திரமயமாக்கப்பட்ட இத்தனை ஆண்டுகளில் 2019 ஆம் ஆண்டில்தான் புவி வெப்பமயமாதல் மிகவும் அதிகமாக பதிவாகியுள்ளது. கடல் நீரில் இருந்த அமிலங்களின் நச்சு கடந்த 150 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைக்காட்டிலும் தற்போது 25 சதவீதம் அதிகமாகி விட்டது.

மேலும், பல பகுதிகளில் புவி வெப்பமயமாதலால் பனிப்பாறைகள் உருகி கடல் நீரின் மட்டம் உலகில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் உயர்ந்துள்ளது.

2019ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுமார் ஒரு கோடி (10 மில்லியன்) மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் 70 லட்சம் பேர் (7 மில்லியன்) மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களினால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இயற்கை பேரிடர்களால் வசிப்பிடங்களை விட்டு இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 லட்சமாக (22 மில்லியன்) உயரக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நூறாண்டுக்கு ஒரு முறை மட்டுமே வரும் அனல் காற்று போன்ற பேராபத்துக்கள் தற்போது அடிக்கடி நிகழ்கின்றன. ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பியாவிலும் இந்த ஆண்டு மிகவும் அதிகமாக அனல் காற்று வீசியுள்ளது என இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றமையால் 2010 முதல் 2019 வரையிலான ஆண்டுகள் புவியின் மிக அதிக வெப்பமயமான ஆண்டுகளாகும் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

## 55 லட்சம் பேர் 'லில் பாப்' பூனையின் ரசிகர்கள்



வொஷிங்டன், டிசெ. 5

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தைச் சேர்ந்த மைக் பிரிடாஸ்கி என்பவர் செல்லப்பிராணியாக பூனையை வளர்த்து வந்தார். 'லில் பாப்' என்ற பெயரிடப்பட்ட இந்தப் பூனை மற்ற பூனைகளை போல் இல்லாமல் வித்தியாசமான தோற்றத்தைத் கொண்டிருந்ததால் இணையத்தில் மிகவும் பிரபலமாக இருந்து வந்தது.

இந்தப் பூனை வளர்ச்சிக்குறைவு நோய் (குள்ளத் தன்மை) உள்பட பல உடல்நல பிரச்சினைகளோடு பிறந்திருந்தது. இதனால் இந்தப் பூனைக்கு ஒவ்வொரு பர்தத்திலும் ஒரு விரல் கூடுதலாக இருந்தது. அதோடு சரியான வளர்ச்சியுறாத தாடையாலும் பற்கள் இல்லாததாலும் நாக்கு எப்போதும் வெளியே நீட்டிக் கொண்டு இருக்கும். இத்தகைய தனித்தன்மையான தோற்றத்தால் 'லில் பாப்' இணையத்தில் பிரபலமடைந்தது. 'லில் பாப்' பூனையை இன்ஸ்டாகிராமில் 55 லட்சத்துக்கும் அதிகமானோர் பின் தொடர்ந்து வந்தனர்.

இதன் நட்சத்திர பிரபலத்தை கொண்டு, மைக் பிரிடாஸ்கி அமெரிக்க விலங்கு வதை தடுப்பு நிறுவனம் மூலம் ஊனமுற்ற பிற பூனைகளுக்கு உதவுவது உள்பட தொண்டு நிறுவனத்திற்கு நிதி திரட்டி வந்தார்.

இந்த நிலையில் உடல் நலக்குறைவால் 'லில் பாப்' பூனை நேற்று முன்தினம் உயிரிழந்தது. மைக் பிரிடாஸ்கி இந்த தகவலை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டார். இது அந்தப் பூனையின் ரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. (ஒ,5)

## நிலவில் விழுந்த விக்ரம் லேண்டரை முன்பே கண்டுபிடித்துவிட்டோம்

### இஸ்ரோ தலைவர் தகவல்

பெங்களூர், டிசெ. 5

நிலவை ஆய்வு செய்வதற்காக இந்தியா கடந்த ஜூலை மாதம் 22ஆம் திகதி 'சந்திரயான்2' விண்கலத்தை அனுப்பியது. செப்ரெம்பர் 7ஆம் திகதி விண்கலத்தின் விக்ரம் லேண்டரை நிலவின் தென்துருவத்தில் தரை இறக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் லேண்டரை தரை இறக்கும்போது நிலவில் இருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் அதன் வேகம் அதிகரித்தது. இதன் காரணமாக லேண்டர் கருவி திசைமாறி சென்று நிலவின் மேற்பரப்பில் மோதி விழுந்து விட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவின் நாசா அனுப்பிய செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் மூலம் விக்ரம் லேண்டர் விழுந்த இடம் கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த சண்முக சுப்பிரமணியன் உதவியுடன் லேண்டர் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என நாசா கூறியுள்ளது.

இந்த நிலையில், விக்ரம் லேண்டரை ஓர்பிட்டர் முன்பே கண்டுபிடித்துவிட்டதாக இஸ்ரோ தலைவர் சிவன் கூறியுள்ளார்.

விக்ரம் லேண்டரை கண்டுபிடித்தது தொடர்பான தகவலை ஏற்கனவே இஸ்ரோவின் இணையதளத்தில் வெளியிட்டிருப்பதாகவும், மற்றவர்களின் ஆய்வை நாங்கள் சரிபார்க்க வேண்டிய அவசியம் எழவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,5)



## அமெரிக்கத் தேர்தல் போட்டியிலிருந்து விலகினார் கமலா

மட்ரிட், டிசெ. 5

அமெரிக்க அரச தலைவர் தேர்தலில் இருந்து விலகுகிறார் என இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் அறிவித்திருக்கிறார். தேர்தல் பரப்புரைக்கு போதிய நிதி இல்லாத காரணத்தால் விலகுவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க அரச தலைவர் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு அரச தலைவர் தேர்தலில் கட்சி சார்பில் வேட்பாளர்களை முடிவு செய்வதற்கான தேர்வு தொடங்கியுள்ளது. அந்த வகையில் ஜனநாயகக் கட்சியின் செனட் உறுப்பினராக இருக்கும் கமலா ஹாரிஸ் அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து வந்தவர்.

ட்ரம்ப் கொண்டு வந்த அமெரிக்க குடியுரிமைக் கொள்கை, மெக்ஸிகோ சுவர் விவகாரம், வரிவிதிப்புக் கொள்கை ஆகியவற்றை எதிர்த்து செனட் சபையில் வலுவாக அவர் குரல் கொடுத்து வந்தார்.

கடந்த ஜனவரி மாதம் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட கமலா ஹாரிஸ் விருப்பம் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் சார்ப்பில் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்தது. இவர்களில் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக, ஜனநாயகக் கட்சி சார்பில் உட்கட்சி தேர்தல் நடத்தப்படும். அதில் வெற்றி பெறுபவர்தான் அரச தலைவர் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளராக களமிறங்க முடியும். ஆரம்பத்தில் கமலா ஹாரிஸுக்கும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்ததால் தேர்தல் பரப்புரைக்கான நிதியையும் அவர் வேகமாக திரட்டினார். நாளடைவில் ஆதரவு குறைய தற்போது தேர்தல் பரப்புரைக்குத் தேவையான நிதி கிடைக்காததால் தேர்தலிருந்து விலகுவதாக அவர் அறிவித்திருக்கிறார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸின் தாயார் சியாமளா கோபாலன், சென்னையைச் சேர்ந்தவர். கமலாவின் தந்தை ஜமைக்கா நாட்டைச் சேர்ந்தவர். கமலா ஹாரிஸ் ஆபிரிக்க இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் கலிபோர்னியா சட்டமா அதிபராவார். (ஒ,5)




# ஹொங்கொங் கடலில் பயணிப்பதற்குத் தடை

## சீனா விதித்தது

வொஷிங்டன், டிசெ. 5

ஹொங்கொங் கடல் பகுதியில் அமெரிக்கா அண்மைக்காலமாக அதிகம் தலையிட்டுவரும் நிலையில் ஹொங்கொங் கடற்பரப்பில் பயணிப்பதற்கு அமெரிக்க கடற்படைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சீனா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சீன அயலுறவுத் துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில், சீனா மீதான அமெரிக்காவின் காரணமில்லாத சமீபத்திய நடவடிக்கைக்கு எதிராக ஹொங்கொங் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படைகள் பயணிப்பதற்கு தடை விதிக்க சீன அரசு முடிவு எடுத்துள்ளது - என்று குறிப்பிட்டுள்ளது.

**பின்னணி**

ஹொங்கொங் சீனாவின் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பகுதியாக உள்ளது. முன்னதாக, ஹொங்கொங் கைதிகளை விசாரணைகளுக்காக சீனாவுக்கு கொண்டு செல்லும் பிரேரணை ஒன்றை சீனா கொண்டுவந்தது.

இதற்கு ஆதரவு தெரிவித்து இணை அனுசரணை வழங்கியது ஹொங்கொங் நிர்வாகம்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹொங்கொங்கில் பரவலாகப் போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்கள் அரசின் இரும்புக் கரம்கொண்டு அடக்க சீனா முயல்கிறது.

இதற்கு அமெரிக்கா, ஐ.நா என்பன கடும் கண்டனம் தெரிவித்தன. அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஹொங்கொங் மற்றும் சீன அரசுகளைக் கண்டித்துதீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இதற்குப் பதிலடியாகவே அமெரிக்கக் கடற்படை ஹொங்கொங் கடற்பரப்பில் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈராக் தலைமை அமைச்சரின் பதவி விலகல் ஏற்கப்பட்டது!

பக்தாத், டிசெ. 5

ஈராக்கின் தலைமை அமைச்சர் அதில் அப்துல் மஹ்தியின் பதவி விலகலை அந்த நாட்டின் நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது.

ஈராக்கில் ஊழல், வேலையின்மை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து தலைமை அமைச்சர் அதில் அப்துல் மஹ்திக்கு எதிராக 7 வாரங்களுக்கும் மேலாகப் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். அதிகரித்த அழுத்தத்தை அடுத்து பதவி விலகுவதாக ஈராக்கியத் தலைமை அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். அவரின் பதவி விலகல் கடிதத்தை ஈராக்கிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் ஏற்றுக்கொண்டது. (ம)


அதில் அப்துல் மஹ்தி



# ஒரு வருடம் வரை கெடாத புதிய வகை அப்பிள் அறிமுகம்

வோஷிங்டன், டிசெ. 5

குளிர்சாதன பெட்டியில் வைத்தால் சுமார் ஒரு வருடத்துக்கு கெடாமல் இருக்கும் புதிய வகை அப்பிள் அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது.

அமெரிக்காவில் வாழைப்பழங்களை அடுத்து அதிகம் விற்பனையாகும் பழமாக அப்பிள் இருக்கிறது. இதனால் அந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் புதிய வகையிலான அப்பிள்களை கண்டறிவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில் குளிர்சாதன பெட்டியில் வைத்தால் சுமார் ஒரு வருடத்துக்கு கெடாமல் இருக்கும் புதிய வகை அப்பிள் அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வகை அப்பிளை கண்டறிவதற்கு சுமார் 20 வருடங்கள் ஆனதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (ம)



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் புத்துர்ணர்வு பிறக்கும். அடுத்தவர் வியக்கும் வகையில் பணி புரிவீர்கள். தொழிலில் உபரி பணவருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் சுப நிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவு அதிகரித்து வாழ்க்கைத் தரம் உயரும். இஷ்ட தெய்வ் வழிபாடு சில நன்மையைத் தரும்

**மிதுனம்:** பிடிவாத குணத்தால் அவபெயர்ஏற்படலாம். தொழிலில் அனுகூலம். பாதுகாக்க அதிக உழைப்பு உதவும். புதிய இனங்களில் பண செலவு அதிகரிக்கும். வாகன பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்கள் மனதைச் சங்கடப்படுத்தலாம். சொந்த பணியில் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு உதவும். சேமிப்பு பணம் செலவாகும்.

**சிம்மம்:** மனதில் புத்துணர்வு பெறுவீர்கள். தொழிலில் இருந்த தாமதம் விலகி உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாய பண வரவு கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**கன்னி:** உங்களின் அனுபவ அறிவு பரிமளிக்கும். புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் அதிகரிக்கும். ஆதாய பண வரவில் குடும்ப தேவை நிறைவேறும்.

**துலாம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் மேம்பட நண்பரின் ஆலோசனை உதவும். சராசரியை விட பண செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினரின் செயலை விவாதிக்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை தாமத கதியில் இயங்கும். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பைப் பின்பற்றவும்.

**தனுசு:** நற்குணம் உள்ளவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டம் நிறைவேறும் முன் முடிவை பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வளர்ச்சி பெற மாற்று உபாயம் பயன்படும். அளவான பண வரவு கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். நண்பரின் உதவி வியப்பை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும்.

**மீனம்:** செயல்களில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணச் செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள்.




### தெற்காசிய நீளம் பாய்தலில்

# இலங்கை வீராங்கனைகள் தங்கம், வெள்ளி பதக்கங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.5
நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வரும் 13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் நீளம் பாய்தல் போட்டியில் இலங்கை வீராங்கனைகள் தங்கம், வெள்ளி பதக்கங்களைக் கைப்பற்றினர்.

பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் இலங்கை சார்பில் களமியங்கிய சாரங்கி சில்வா 6.38 மீற்றர் தாண்டி தங்கப் பதக்கத்தையும், அஞ்சனி புல்வன்ஸ 6.11 மீற்றர் மீற்றர் தாண்டி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.5
இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் லீக் ஆட்டங்கள் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 60:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி 48:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

வேலணை மத்திய கல்லூரி அணிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணி 22:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.5
இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் லீக் ஆட்டங்கள் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிஅணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணியை எதிர்த்து இளவாலைசென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)




### தெற்காசிய விளையாட்டில்

# மலையக வீரருக்கு வெள்ளிப் பதக்கம்

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வரும் 13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தடகளப் போட்டியில் மலையக வீரரான குமார் சண்முகேஸ்வரன் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் களமியங்கிய மலையக வீரரான குமார் சண்முகேஸ்வரன் பந்தயத் தூரத்தை 30 நிமிடங்கள் 49.20 செக்கன்களில் ஓடி முடிந்து வெள்ளிப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இந்திய வீரர் சுரேஷ்குமார் 29 நிமிடங்கள் 33.06 செக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தையும், நேபாள வீரர் தீபக் அதிகாரி 30 நிமிடங்கள் 50.06 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## சதுரங்கப் போட்டியில் தந்தை, மகன் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.5
குருநாகலில் நடைபெற்று வரும் எது கல்புர சதுரங்க மின்னல் வேகப் போட்டித் தொடரில் 13 வயதுப் பிரிவுக் குட்பட்ட ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆ.தரன் இரண்டாம் இடத்தைப்பெற்றார். இவர் 7 சுற்றுப் போட்டிகளில் 6 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றார். இதே வேளை பெற்றோர்களுக்கு இடையில் இடம் பெற்ற மின்னல் வேக சதுரங்கப் போட்டியில் ஆதவன் 5 சுற்றுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுமுதலாம் இடத்தை தனதாக்கிக் கொண்டார். மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற இருவரும் தந்தை, மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (23)



# நசீம் ஷா 19 வயது அணியில் சேர்ப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் 16 வயதில் களம் இறங்கிய நசீம் ஷா பாகிஸ்தான் அணியின் 19 வயதுப்பிரிவு அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் பிரிஸ்பேனில் நடைபெற்றது. இந்த டெஸ்டில் பாகிஸ்தான் அணியில் 16 வயதேயான நசீம் ஷா அறிமுகம் ஆனார். ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக நசீம் ஷாவால் ஜொலிக்க முடியவில்லை.

ஆனால் முன்னணி வீரர்களுக்கு எதிராக அவருக்கு சிறப்பான அனுபவம் கிடைத்தது. இந்த நிலையில் 19 வயதுக்குட்பட்ட பாகிஸ்தான் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தில் எங்களது முக்கிய ஆயுதமே நசீம் ஷாதான் என்று பயிற்சியாளர் இஜாஸ் அகமது தெரிவித்தார்.

# மாற்றுத் திறனாளிகள் தின விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் நாளை

கிளிநொச்சி, டிசெ.5
பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் தினவிழாவும், விளையாட்டுப் போட்டிகளும் நாளை வெள்ளிக்கிழமை மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மாற்றுத் திறனாளிகள் தினவிழா நிகழ்வுகள் மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திலும், விளையாட்டு போட்டிகள் மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்திலும் இடம்பெறவுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் முச்சக்கர வண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், வேகநடை, 100 மீற்றர் ஓட்டம், நீர் நிரப்புதல் ஆகியபோட்டிகள் ஆண், பெண் போட்டியாளர்களுக்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபரும் சமூக சேவையாளருமாகிய க.இராசேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார். (222.23)



# தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டில் நவில்ட் பாடசாலைக்கு 30 பதக்கங்கள்

கொடிகாமம், டிசெ.5

கல்வி அமைச்சினால் முதன் முறையாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு விழாவில் கைதடி நவில்ட் பாடசாலை 10 தங்கப் பதக்கங்கள், 15 வெள்ளிப் பதக்கங்கள், 5 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 30 பதக்கங்களைக் கைப்பற்றினார்.

கொழும்பு சுகததாச பன்னாட்டு விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் ஈ.றிவால்டோ 18 வயது கீழ் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ,200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், ரி.ரகுராம் 22 வயதின் கீழ் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டி மற்றும் குண்டு போடுதல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும். ஏ.எப்சிபா 18 வயதின் கீழ் பிரிவு பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், கே.யதுசா 22 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்கத்தையும்,18 வயதின் கீழ் பிரிவு ஆண்கள் 4×100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் எஸ்.மதிவதனன், எஸ்.பிந்துஜன், ஈ.றிவால்டோ ஐ.அனுசன் ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும்,எஸ்.ஜெபதீபன் 16 வயதின் கீழ் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி ப் பதக்கத்தையும்.எஸ்.லக்சனா 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்,பி.காருஜன் 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி ப் பதக்கத்தையும்,கே.யதுசா 22 வயதுப் பிரிவு பெண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி ப் பதக்கத்தையும், எஸ்.சுஜிதா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், ஜே.யோகேஸ்வரன் 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்,வி.ஜோதிகா எஸ்.லக்சனா, ஏ.தயானா, கே.ஜெனுசா ஆகியோர் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 4×100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், எஸ்.ஜானுகா எஸ்.சுஜிதா ஏ.இப்சிகா ஐ.மதுரா ஆகியோர் 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான அஞ்சல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், இ.றிவல்டோ 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,எஸ்.ஜெபதீபன் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,மேரியூலினா14 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,எஸ்.ஆர்த்தி 12 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,எஸ்.சுஜிதா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,எஸ்.சுஜிதா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான 200 மீற்றர் மற்றும் நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்,100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், எஸ்.ஜெபதீபன் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும்,எ.றிவால்டோ 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர்·ஓட்டப் போட்டி,200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுதங்கப் பதக்கத்தையும், நீளம் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

(159 23)

## டெஸ்ட் தரப்படுத்தலில் கோக்லி மீண்டும் முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் சிமித் இரண்டாம் இடத்துக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டார்.

பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் டெஸ்ட் தரப்படுத்தலில் விராட் கோக்லி முதல் இடத்தில் இருந்தார். ஓராண்டு தடைக்குப் பின்னர் டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய ஆஸ்திரேலியா வீரர் சிமித் ஆஷஸ் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி கோக்லியை பின்தள்ளி முதல் இடத்தைப் பிடித்தார்.

பின்னர் கோக்லி பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி இருந்தார். சிமித் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகளிலும் சிறப்பாக விளையாடவில்லை. இதனால் அவர் 8 புள்ளிகளை இழந்து 123 புள்ளிகள் பெற்றார். விராட் கோலி 128 புள்ளிகளில் இருந்ததால் மீண்டும் முதல் இடத்தை பிடித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக முச்சதம் அடித்த டேவிட் வோர்னர் 12 இடங்கள் முன்னேறி 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். கேன் 3ஆவது இடத்திலும், 4ஆவது இடத்திலும் உள்ளனர்.



## பாகிஸ்தான் வீரர்களை ஒப்பந்தம் செய்தது ரெனேகட்ஸ் அணி

பிக் பாஷ் நடப்பு சம்பியன் அணியான மெல்போர்ன் ரெனேகட்ஸ் பாகிஸ்தான் வீரர்களான உஸ்மான் ஷின்வாரி, பஹீம் அஷ்ரஃப் ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ் ரி-20 லீக் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகின்றது. நடப்பு சம்பியன் அணியான மெல்பேர்ன் ரெனேகட்ஸ் பாகிஸ்தானைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் உஸ்மான் ஷின்வாரி, சகலதுறை ஆட்டக்காரர் பஹீம் அஷ்ரஃப் ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளது.



நேபாளம் – இலங்கை அணிகள் மோதிய போட்டியில்

# யூட்சுபன் கோல் போட ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம் டிசெ.5

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வரும் 13ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

காத்மண்டு போக்கார அரங்கில் இடம்பெற்ற இரண்டாவது லீக்முறையிலான ஆட்டத்தில் இலங்கை -நேபாள அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்தப் போட்டியில் இலங்கை அணி சார்பில் தமிழ் வீரர் யூட்சுபனே அந்தக் கோலைப் பதிவு செய்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் 37ஆவது நிமிடத்தில் நேபாள அணி வீரரால் முதல் கோல் பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் யூட்சுபன் அபாரமன கோல் ஒன்றைப் போட ஆட்டம் சமநிலையானது. (23)




நாணயங்களில் பொறிக்கப்பட்ட முதல் உயிருள்ள நபர்

## பெடரருக்கு சுவிஸ் அரசு மதிப்பளிப்பு

பன்னாட்டு ரென்னிஸ் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்து நாட்டின் வீரரான ரோஜர் பெடரரை மதிப்பளிக்கும் வகையில் அந்த நாட்டு அரசு அவரது உருவம் பொறிக்கப்பட்ட நாணயக் குற்றியொன்றை வெளியிட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தின் 20 ஃப்ரேங்க் என்ற வெள்ளி நாணயக் குற்றியிலேயே இவ்வாறு அவரது முகம் பொறிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி இந்த நாணயக் குற்றி புழக்கத்துக்கு விடப்படவுள் ளது.

இதன்மூலம் ரோஜர் பெடரர் சுவிஸ் நாணயங்களில் பொறிக்கப்பட்ட முதல் உயிருள்ள நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இதற்காக பெடரர் சுவிஸ் அரசுக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான

# ‘ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்’ விருது நியூசிலாந்துக்கு

### எம்.சி.சி வழங்கி மதிப்பளிப்பு

2019ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடிய நியூசிலாந்து அணியின் தன்னம்பிக்கையான அணுகுமுறையை பாராட்டி ‘ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்’ (கிரிக்கெட்டின் மனஉறுதி)விருது வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவராலும் மறக்க முடியாத ஒரு தொடர் என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு விறுவிறுப்புக்கு பஞ்மில்லாத தொடராக இருந்தது.

இந்த ஆட்டம் பல்வேறு பரபரப்புக்கு மத்தியில் இடம்பெற்று இறுதியில் சமநிலையில் முடிவடைந்தது. இதையடுத்து சுப்பர் பந்துப்பரிமாற்ற முறையிலும் சமநிலையில் முடிவடைய இரு அணிகளுக்கும் கிண்ணம் பகிர்ந்தளிக்கப்படும் என அனைவரும் எண்ணிய நிலையில் அதிக பவுண்டரிகள் அடித்ததன் அடிப்படையில் இங்கிலாந்து அணி கிண்ணத்தை வென்றது.



இது நியூசிலாந்து அணியினருக்கு மட்டுமன்றி கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்கும் ஏமாற்றமாக அமைந்தது. இறுதி வரை மனஉறுதியுடன் முழுத் திறமையை வெளிப்படுத்திய நியூசிலாந்து அணிக்கே கிண்ணம் கிடைத்திருக்க வேண்டும் எனப் பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்தனர்.

ஆனால், நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனும் ஏனைய வீரர்களும் இரண்டாம் இடத்தை எந்தவித மனக்கலக்கமுமின்றி ஏற்றுக்கொண்டனர். இந்த நிலையில், உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடிய நியூசிலாந்து அணியின் திடமான மனப்பாங்கை பாராட்டி அந்த அணிக்கு இந்த ஆண்டுக்கான கிரிக்கெட்டின் மன உறுதி (ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்) எனும் சிறப்பு விருதை லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் எம்.சி.சி வழங்கி மதிப்பளித்தது.




இது குறித்து எம்.சி.சி தலைவர் சங்ககார தெரிவிக்கையில்;

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியின் விளையாட்டுத்திறன், பணிவு மற்றும் தன்னலமற்ற தன்மை ஆகியவை வெளிப்பட்டது. அந்த அணியின் வீரர்கள் இந்த விருதுக்குத் தகுதியானவர்கள் - என்றார்.

## மரண அறிவித்தல்



திருமதி

### உலகநாதர் பரமேஸ்வரி

அத்தாய். பூநகரியை பிறப்பிடமாகவும் ஞானவைரவர் கோயிலடி. அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உலகநாதர் பரமேஸ்வரி கடந்த (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற உலகநாதர் இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகர் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான பாக்கியம். செல்லமுத்து. மயில்வாகனம். இராசம்மா மற்றும் தங்கம்மா. இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகாநிதி (ஜயோ). இராசமலர் (மலர்). சதானந்தன் (சித்தப்பா). முருகானந்தன். அருளானந்தன் (இத்தாலி). சச்சிதானந்தன். நித்தியானந்தன்(செல்வம்). கருணானந்தன் (தேவன் - இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரா. செல்லத்துரை. யோகராணி. சித்திரா. மதி - சசி. செல்வி சசிரேகா காலஞ்சென்ற ரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டி மேற்கிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறிவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் கோயிலடி,**
**அளவெட்டி மேற்கு,**
**அளவெட்டி.** (CS 24176)(14.17)

தகவல் :
**குடும்பத்தினர்.**

**சிறுநீரகம் தேவை**

34 வயதுடையவருக்கு சிறுநீரக $O^+$ குருதி வகையை சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

(CS 29728)(14.17)

தொடர்பு: 077 990 5875/ 077 897 1781

**Personal Class**

இலவசக்கருத்தரங்கில் வழிகாட்டும் பல வருட அனுபவம் மிக்க யாழ் ஆசிரியரின் வழிகாட்டலில்
Grade 6-11 வரை (TamilMedium)

**SCIENCE**

077 667 9544, 076 343 2521

**காணி விற்பனைக்கு**

கட்டப்பிராயில் குழுக்கண்டி வைரவர் கோயிலுக்கு அருகாமையில் சுற்றுமதிலுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை

077 391 0242

**குருக்கள் தேவை**

**ஆஸ்திரேலியாவில்** உள்ள பிரபல **இந்து ஆலயம்** ஒன்றிற்கு குருக்கள் தேவை.

(CS 29714)(13.17)

077 248 7845, 077 661 7382

**ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் உள்ள கடையொன்றிற்கு ஆள்கள் தேவை.

(CS 229724)(13.17)

077 614 9015, 021 222 8307

**BA 1st YEAR**

**பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி**

- ✓ மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- ✓ A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியும் Common General Marks 30 புள்ளியும் அதற்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- ✓ பதிவிற்குரிய விண்ணப்பங்கள் இடம்பெறுகின்றன.
- ✓ விண்ணப்ப பதிவு முடிவுத்திகதி 31.12.2019 ஆகும்.
- ✓ A/L 2018 எழுதியவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் பரீட்சை எழுதியவர்களும் மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் ஆயின் விண்ணப்பிக்க முடியும்.

விபரங்களுக்கு
S.அருள்நங்கை (நிர்வாகி)

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

021 222 8148, 077 846 9721, 077 314 4762

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.